# சா. ஜே. வே. செல்வநாயகம்

நெருக்கடி காலத் தலைமைத்துவம் பற்றி
நினைவு அலைகளின் உருவம் ஒன்றின்
அடிப்படையினதோர் ஆய்வு

அ. ஜெயரத்தினம் வில்சன்

## செல்வநாயகம் நினைவுப் பேருரை
1981

*

தந்தை செல்வா அறங்காவற் குழு
யாழ்ப்பாணம்

# சமர்ப்பணம்

ஈழத் தமிழ் இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்டிய ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வநாயகம் மறைந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியான நேரத்தில், 1981ஆம் ஆண்டு செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவாக, பேராசிரியர் ஐயரட்ணம் உவில்சன் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுரை தந்தை செல்வாவின் தலைமையின் தன்மையை அவரோடு நெருங்கிய உறவு பூண்ட ஒரு அறிஞரின் வாயால் மக்கள் முன் விளக்க முற்படுகின்றது. இந்த ஆய்வு அவர் வாழ்ந்த காலத்திற்கு மிகக் கிட்டிய காலத்தில் நடைபெறுகின்றதென்றோ, அவருக்கு மிக நெருங்கிய ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றதென்றோ சிலர் இம்மதிப்பீட்டைக் குறை கூறலாம். இது ஓர் ஆரம்பமேயன்றி முடிவானதல்ல. அவரது அடிச்சுவடு மறையுமுன் நடைபெறும் ஆய்வு மிகப் பசுமையான நினைவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அவருடன் நெருங்கி உரையாடி அவர் வாயாலேயே பல விடயங்களைக் கேட்டறிந்தவரும் அரசியல் நூல் வல்லுனராக உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பேராசிரியருமான ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே இம்மதிப்பீடு வருங்கால ஆய்வாளர்களுக்கு ஓர் சிறந்த களஞ்சியமாக ஓர் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அரசியலில் தந்தை செல்வா அடியெடுத்து வைத்தபோது தெளிந்த சித்தாந்தங்களோடு, அவற்றை நடைமுறைப்படுத்தும் திட்டங்களோடு வந்தவரல்லர். பேராசிரியர் உவில்சன் சிறப்புற எடுத்துக் காட்டுவது போலத் தமிழ் இனத்தின் தலைமையில் ஓர் வெற்றிடம் ஏற்பட்ட போது, அதுவும் நெருக்கடி மிகுந்த வரலாற்றுக் கட்டத்தில் அவ்வெற்றிடத்தை நிரப்பவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்தான் தந்தை செல்வா. அவர் தமிழ் இனத்தை வழி நடத்திய கால் நூற்றுண்டு காலத்தில் அவர் கைக்கொண்ட போராட்ட நடைமுறைகள் மாத்திரமன்றி அக்காலத்தில் வளர்ச்சியடைந்து பூரணத்துவம் பெற்ற அவரின் அரசியல் கருத்துக்கள் எல்லாம் இச்சிறு நினைவுரையில் பேராசிரியரால் தொட்டுச் செல்லப்படுகின்றன.

ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்ட சிக்கல் நிறைந்த கருத்துக்களைத் தமிழில் தருவது கடினமாயினும் இப்பணியை ஓரளவு வெற்றிகரமாகச் செய்திருக்கும், தம் பெயர் வெளியிடப்படுவதை விரும்பாத மொழிபெயர்ப்பாளருக்கு நாம் கடப்பாடு உடையோம். பேராசிரியர் ஐயரட்ணம் உவில்சனின் இம்மதிப்பீட்டை மதிப்பிடும் தகுதி படைத்தவர்கள் தந்தை செல்வாவைத் தம் தலைவராகக்கொண்டு பெருமை பெற்ற தமிழ் பேசும் மக்களே. அவர்களுக்கே இத் தமிழாக்க உரையைச் சமர்ப்பிக்கின்றோம்.

**அ. அமிர்தலிங்கம்**
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி

*31-12-82*

# முன்னுரை

''அவர் தமிழ் பேசும் மக்கள் தம்மை ஓர் தேசீய இனமாகக் கருதச்செய்தார்.'' அவர்களை விடுதலையின் வாயிலை நோக்கி அவர் அழைத்துச் சென்ற நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், கியூ. சி., பா. உ. அவர்கள் ஆற்றிய அளப் பரும் சேவை அதுவேயாகும். தீர்க்கதரிசனம் மிகுந்த இத்தலைவரின் ஒப்பற்ற சேவையை நினைவு கூரும் பொருட்டே ''செல்வநாயகம் ஞாபகார்த்த சொற்பொழிவுகள்'' நிகழ்த்தப்பெறுகின்றன.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஜுலை 11-ஆம் திகதி நிகழ்த்தப் பெற்ற 1981ஆம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவில், இலங்கையின் தலைசிறந்த அரசியல் விஞ்ஞானியும், கனடாவின் நியூபிரான்ஸ்விக் பல்கலைக்கழக அரசியல் நூல் பகுதியின் தலைவருமான பேராசிரியர் ஏ. ஜயரட்ணம் உவில்சன் அவர்கள் இப்பெருந்தமிழ்த் தலைவரின் ஆளுமையைத் தம் நுண்ணறிவால் ஆராய்கின்றார். செல்வநாயகம், மனிதகுலத் தலைவர்களில் அசாதாரணமான ஓர் அபூர்வ வகுப்பைச் சேர்ந்த, நெருக்கடியான ஓர் சூழ்நிலையில் மக்கள் கவர்ச்சிமிக்க தலைவராக விளங்கினார் என்ற கலாநிதி ஜயரட்ணம் உவில்சன் அவர் களின் மதிப்பீட்டை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

ஒரு விடயத்தில் அதாவது (ஓர் குறுகிய கால கட்டத்தில்) காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டங்களோடு ஒப்பிட்டமை தவிர்க்கப்பட்டிருக்கலாம். ''தார்மீகசக்தி என்ற ஆயுதத்தைக் காந்தி கையாளுகிறார்'' என்ற தலைப்பில் ஜீன் ஷார்ப்பினால் எழுதப்பட்டு கலாநிதி அல்பேட் ஐன்ஸ்ரீன் முன்னுரை எழுதிய நூலைப் படித்தால் அது ''சத்தியாக்கிரகம்'' என்பதன் கருத்தை விளக்குகின்றது. வாஷிங்ரன் ஹோவாட் பல்கலைக் கழகத்தில் 1960இல் திருமதி போல். எஸ். பக் நிகழ்த்திய காந்தி நினைவுச் சொற்பொழிவைப் படித்தால் அது ''தலைமையின் தத்துவங்களை'' விளக்கும்.

இதைக் கூறும்போது இலங்கைத் தமிழ் மக்களின் தனித்துவ உணர்வைத் தந்தை செல்வா புதுப்பிக்கத் தவறினார் என்றோ, அவரது ஆளுமையின் தார்மீகச் சிறப்பைக் குறைப்பதாகவோ, தமது மதிப் பீட்டுக்கு ஜயரட்ணம் உவில்சன் பயன்படுத்திய ஆழ்ந்த நுண்ணறி வைச் சந்தேகிப்பதாகவோ அர்த்தமாகாது. மாறாகத் தந்தை அவர்கள் எவற்றிற்காக நின்றார், அவர் கைக்கொண்ட செயல்முறைகள் எவை, அவற்றின் பின்னால் நின்ற மனிதர் எத்தன்மையானவர் என்பவற்றையிட்டு ஆராய இவ்வுரை உதவுவதாகும்.

இத்தகைய ஆய்வுகள் பல இந்நாட்டிற்கு வேண்டும். தமிழ் இயக் கத்தின் பூரணமான பின்னணியில், இலங்கைத் தேசீய விழிப்பின் ஆரம்பம் வரலாறு ஆகியவற்றையும் ஆராய்ந்து திரு. செல்வநாயகம் அவர்களின் காலமும் வாழ்க்கையும் பற்றிய பூரணமான ஆய்வு வேண்டப்படுகிறது. இப்பணியில் ஜயரட்ணம் உவில்சன் அவர்களே அளப்பரிய பங்களிப்பை வழங்கலாம் என்று நம்புகிறேன்.


கே. நேசையா

தலைவர்

தந்தை செல்வா அறங்காவல் குழு

# ஆதர்ஸத் தலைவன்

எனது பேருரையின் கதாநாயகன் திருவாளர் சா. ஜே. வே. செல்வ நாயகம் அவர்கள் 1956 முதல் 1977வரை சுமார் 21ஆண்டு காலம் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த சமூக அரசியற் பிரச்சனை கள் மிகவும் துயரார்ந்த உச்சநிலையடைந்திருந்த காலகட்டத்தில் இந்த மக்களின் பேரன்புக்கும் நன்மதிப்புக்கும் உரியராய் வாழ்ந்தார்.

வழமை நிலைக் காலத்துத் தலைமைக்கும் வரலாற்று ஒழுக்கில் ஏற் படும் குறிப்பான ஓர் இக்கட்டுநிலைக் காலத்துத் தலைமைக்குமிடை யேயும் — சாதாரண நிலைமைக்கும் நெருக்கடிகாலத் தலைமைக்குமிடை யேயும் வேறுபாடு காணப்பட வேண்டியது அவசியமாகும். நிச்சயமற்ற நிலை, சமூக சீர்கேடு, அரசியல் நிர்மூலம் என்ற பேராபத்துக்களை எதிர் நோக்கும் மக்களிடையே அத்தகைய ஒரு வரலாற்றுக் கட்டத்தில் தாங் கொணு நெருக்கடிப் பிரவாகத்துக்கு உளவியல் ரீதியான பதில், தலைவன் ஒருவனின் வசீகரமாகும்.

நெருக்கடியிலும் நிலை பிறழாமை என்பதே இத்தகைய இக்கட்டில் வசீகரத் தலைவன் அல்லது ஆதர்ஸத் தலைவன் பேணும் முதற் பண் பாகும். பேரழிவுப் பேராற்றின் மத்தியிலும் நிலைதளரா அடிப்பாறை போன்றவன் வசீகரத் தலைவன். இரண்டாவதாக, கைகட்டி வாளாவிருப் பதைத் தவிர்த்து பாய்ந்து வரும் பேராற்றில் தான் குதித்துக் குறுக் கிட்டு அணைகட்டுதல் அவசியம் என்ற அடக்கவொண்ணுத உந்து தல் தலைவனில் தோன்றும். தனது மக்களை எதிர்கொண்டுவரும் அபா யத்தில் தான் குறுக்கிட்டேயாக வேண்டும் என்ற திடசித்தம் வெளிப்பா டடையும். அதனை ஒழித்துக்கட்டும் உத்வேகம் தோன்றும். அத்து டன் எதிர்காலம்பற்றிய தரிசனத் தெளிவு நிறைவாக அமையும். பொருத்தமான உறுதிப்பாடு செயலில் தோன்றும். தான் சரிதான் என்பதும் தனது மக்களை எதிர்கொண்ட பிரச்சனைக்குத் தன்னிடம் பரிகாரம் உண்டு என்பதும் அவனுக்குத் தெரியும்.

வசீகரத் தலைவனுக்கும் வேறுவகைத் தலைவனுக்குமிடையே இருக்கும் வேறுபாடு என்ன என நீங்கள் வினவலாம். பிரபல ஜேர்மானிய சமூக வியலாளரான மக்ஸ் உவெபர் அவர்களின் கூற்றுப்படி தலைமைத்துவத் தில் மூன்று வகை உண்டு. பாரம்பரியத்தின் அடிப்படையில் தோன்றும் அதிகாரம் இவற்றுள் முதலானது. அதாவது அழிவற்ற பழைமையின்மீதும் போற்றப்படும் வழமைகள்மீதும் தோன்றும் அதி காரம் இது. இரண்டாவது சட்டபூர்வமான அதிகாரம். அதாவது அவ் வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்ட ஒழுங்கமைப்பின் வலுமீது நம்பிக்கையை வைத்துக்கொண்டிருக்கும் அதிகாரம். மூன்ருவதாக சம கால சமூகத்திற்கு வேண்டிய வசீகர அதிகாரம். இத்தகைய தலைமைத் துவம் பற்றியதுதான் இன்றைய எனது பேருரைப் பொருளாகும்.

வசீகரத் தலைவன் எவ்வகையில் ஏனைய தலைவர்களிலிருந்து வேறுபடுகின்றான் ? என்ற வினாவிற்கு விடைகாண முயல வேண்டும். முதலாவதாக இத்தகைய தலைவனுக்கு மக்கள் காட்டுவது அன்பு மாத்திரமல்ல, பக்தியுங்கூடவாகும். இரண்டாவதாக மக்கள் இத்தகையவர்களை வியந்து பாராட்டுவதுடன் மதிப்பச்சத்துடனும் நோக்குவார்கள். மூன்றாவதாக மதிப்புணர்ச்சியிலும் பார்க்க வணக்க உணர்ச்சியே மக்கள் மனதில் மேலோங்கி நிற்கும். கடைசியாக வசீகரத் தலைவன்மீது மக்கள் ஈடுபாடு கொண்டிருப்பதை 'நம்பிக்கை' என்று கூறுவதைவிட தலைவனை முழுமையாக விசுவாசிப்பது எனக் கொள்வதே பொருத்தமானது. வசீகரம் என்பது மானிட உயிர் ஒன்றின் புறநடைத்தன்மையான ஒரு குணாதிசயமெனக் கொள்ள வேண்டுமென்றார் மாக்ஸ் உவெபர். குறித்த ஒரு மானிடனின் பண்பின் தரத்திலும் அசாதாரண புனிதத்திலும் அஞ்சா நெஞ்சத்திலும் முன்மாதிரியான குணாதிசயத்திலும் அவன்மீது தாம் கொண்ட அதீத நம்பிக்கைக்கூடாக மக்கள் அவனுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொள்வதும் அந்தத் தலைவன் அம்மக்களின் உள்ளத்திலும் அறிவிலும் அமர்ந்து விடுவது வசீகரத் தலைமைத்துவத்தினது தன்மையாகும். எனவே எனது கரத்தில் வசீகரத் தலைமைத்துவம் என்பது ஓர் இருவழிப்படிமுறையாகும். வழிகாட்டுபவனுக்கும் வழிநடப்பவர்களுக்குமிடையேயான ஓர் உறவு. தலைவனுக்கும் மக்களுக்குமிடையே நம்பிக்கையும் விளக்கமும் கொண்டதாக இருக்கும்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு தலைவன் அதைப் பிரயோகித்து மக்களை மயக்குவதோ பணியவைக்க நிர்ப்பந்திப்பதோ வசீகரத் தலைமைத்துவம் ஆகாது.

வசீகரத் தலைவர்கள் என்ற அபூர்வமான பகுதியொன்றைச் சேர்ந்தவரே தலைவர் செல்வநாயகம் என்பது எனது கருத்தாகும். அதாவது நெருக்கடி நிலைமை ஒன்றில் நின்ற ஒரு வசீகரத்தலைவராக இவரைக் கொள்ளலாம். சமூகத்திற்கு வேண்டிய தலைமைத்துவத்திற்குரியவராய் இவர் இருந்தார் என்பதற்கு இவரது வாழ்க்கை வரலாற்றில், சில குறிப்புகள் ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தன. இவரது பண்புகளைப் பிரெஞ்சு நாவலாசிரியர் விக்டர் இயூகோவின் வார்த்தைகளில் கூறிக் கொள்வது பொருத்தமானது. சுருக்கநடை, நறுக்கான சிந்தனை, தீர்க்கமான வாழ்க்கை,தனித்துவம் நிறைந்த கொடை ஒன்று அவரிடமிருந்தது. அதாவது அவர் தீர்க்கதரிசியாகி தமிழ் பேசும் மக்களை ஒன்று படுத்துபவராகி, நாட்டினம் ஒன்றாகப் பரிணமிக்க வல்ல தம் வன்மைக்குக் குறுக்கேயிருந்த தடைகளை அகற்றி இனம் ஒன்றுக்கு இருக்கவேண்டிய தன்மரியாதையையும் பெருமையையும் தமிழ் பேசும் மக்களுக்குக் காட்டிய வழிகாட்டியும் சிந்தனையாளருமாக அவர் தோற்றமளித்தார். இத்துணை குறுகிய 21ஆண்டு காலத்துக்குள் எப்படி இதனை அவர் சாதித்தார்? இனம் ஒன்றின் வரலாற்றில் 21 ஆண்டுகள் எவ்வளவு குறுகியதான ஒரு நேரத்துளி. இவை சிந்தனைக்குரியவை.

திரு. செல்வநாயகம் அவர்களின் சொந்தப் பண்புகளைக் குறிப்பிட்டேன். நெருக்கடியிலும் நிலை பிறழாமை; கொந்தளிப்பில் தலையிட்டு அதனை மடக்கி முறிக்கும் நெஞ்சுறுதி; தரிசனத் தெளிவு ஆகிய வசீகரத் தலைமைத்துவத்தை இனங்காட்டும் குணவியல்புகளைக் குறிப்பிட்டேன். இந்தக் குணாதிசயங்களை அன்னாரின் வாழ்க்கை வரலாற்றுடன் இணைத்துக் காட்ட முடியும். குழந்தைப் பருவத்தின் முழுதான பாக்கியத்தையும் அவர் அனுபவிக்க முடியவில்லை. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த மலாயா நாட்டில் ஈப்போ நகரில் இவர் பிறந்தார். இவரது வடிவமையும் பருவத்தில் இவரின் தாயார் தனது மூன்று ஆண் குழந்தைகளுடனும் ஒரு பெண் குழந்தையுடனும் மலாயா விட்டகன்று தனது சொந்தக் கிராமமாகிய இலங்கையின் தெல்லிப்பளைக்குக் குடிபெயர்ந்தார். இவரது சகோதரன் ஒருவரும் சகோதரியும் பின்னர் இறைவனடி சேர்ந்தனர். தந்தையார் மலாயாவிலே தொடர்ந்திருந்து தனது மனைவி மக்களின் சீவியத்துக்குப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தார். சிறந்த கல்வி வசதிகள் அங்கில்லாதிருந்தமையே இவர்கள் சொந்த ஊருக்கு வரக் காரணமாயிருந்தது. அந்தக் காலத்தில் இலங்கை மக்கள் பலர் இவ்வாறே செய்தனர். மலாயாவை விட்டுப் பெயர்ந்து வந்தது எனது கருத்தில் ஒரு உளவியற் குறியீடாக (Psycho – Symbolic) அமைந்தது. ஏனென்றால் தன்னின இலட்சியங்கள் கோட்பாடுகளை நிறுவிய தலைவர்கள் பிறநாடுகளிலிருந்தோ எல்லைப்பகுதிகளிலிருந்தோ வந்திருக்கிறார்கள் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நாம் காணலாம். அல்லது அவர்கள் சில நெருங்கிய பிறநாட்டுத் தொடர்பு கொண்டிருந்தார்கள். நெப்போலியன் போனப்பாட் பிரான்சைச் சேர்ந்தவரல்ல: கோசிக்காத்தீவைச் சேர்ந்தவர். நவீன துருக்கியின் தாபகராகிய முஸ்தாபா கெமால் பாஷா (கெமால் அத்தாத் தேர்க்கு) கிரேக்க மாகாணமாகிய சலோனிகாவில் பிறந்தவர். மகாத்மா காந்தி தென்னாபிரிக்கா ஊடாகத்தான் இந்திய தேசிய இயக்கத்துக்குள் நுழைந்தார். பிரிட்டிஷ் பிரதமராயிருந்த உவின்ஸ்டன் சேர்ச்சிலின் தாயார் அமெரிக்க நாட்டவர். ஜவஹர்லால் நேரு தனது ஆரம்ப கல்வியை ஒரு சிலருக்கென ஒதுக்கிவைத்த பிரிட்டிஷ் பாடசாலையாகிய ஹரோவிலும் பின்னர் இங்கிலாந்திலுள்ள கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றவர்.

திரு. செல்வநாயகத்தின் தந்தையார் திரு. வேலுப்பிள்ளை மலாயாவில் இருந்தமையால் தெல்லிப்பளையில் தனித்திருந்த இந்தப் பிள்ளைகளுக்கு அன்றாட வாழ்க்கையில் ஏனைய பிள்ளைகளுக்கிருப்பதுபோல தந்தை ஒருவரின் அன்பும் மென்மையும் மறுக்கப்பட்டிருந்தது ஒரு முக்கிய சம்பவமாகும். சிற்றப்பன், மாமன், மச்சான், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலர் உதவியாக இருந்தார்கள். ஆனால் பெற்றவர் ஒருவரின் இடத்தை இவர்களால் நிரப்பிவிட இயலுமா? தந்தையார் அருகே இல்லாதவிடத்தில் அடுத்ததாக ஓரளவு நெருக்கமான உறவு பூண்டு

பாதுகாவலனுக இருந்தவர் இவரது தாய்மாமன் வண. எஸ். கே. பொன்னையா ஆவர். மதிப்புமிக்க இந்த உறவினரிடமிருந்து திரு. செல்வநாயகம் உயர்ந்த குணுதிசயங்களைப் பெற்றுக்கொண்டார் என நாம் கொள்ள முடியும். அன்னுரின் தனித்துவம் மிக்க தலைமைத்துவத்துக்கு இரட்சகர் ஒருவருக்கும் பழைய ஏற்பாட்டின் நறுமணத்தையும் அழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் மெசையாவின் உத்வேகத்தையும் கொடுத்தது வணக்கத்துக்குரிய இந்த மதபோதகரின் பால் அவர் பெற்ற பயிற்சியே என நான் அனுமானிக்கிறேன். பெரும்பான்மை இந்து மக்களுக்குத் தலைமை தாங்குவதில் அவர் தனது கிறிஸ்தவமதக் கொள்கையில் தொய்வு காட்ட மறுத்து நின்ருர். புதிய நாட்டினங்களை நிறுவிய சில பெருந்தலைவர்களைப் போலவே இவரும் நடந்திருக்கிருர். நவீன துருக்கியின் பிதாவாகிய கெமால் அத்தாத்தேர்க் ஓர் அனுட்டான முஸ்லீம் அல்ல. பாகிஸ்தானை நிறுவிய முகமதலி ஜின்னுவும் அவ்வாறே. முதல் இந்தியப் பிரதமராக அதுவும் 17 நீண்ட ஆண்டுகளாகப் பிரதமராக நீடித்த — ஜவகர்லால் நேரு தனது தெய்வநம்பிக்கையின்மையைப் பகிரங்கமாக கூறித் திரிபவராயிருந்தவர். தெய்வ நம்பிக்கைக்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆயினும் இந்தப் பெருந் தலைவர்கள் வைதீக இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தலைமைதாங்கி வழிநடத்தியவர்கள். சிறிய சம்பவம் ஒன்றை இது தொடர்பில் கூறலாம் என நினைக்கிறேன். (மதம்மாறிய திரு. பண்டாரநாயக்காவின் பாரியார்) திருமதி பண்டாரநாயக்காவுடன் நிகழ்ந்த ஒரு சொற்போரில் திரு. செல்வநாயகம் கூறியது ஞாபகம் வருகின்றது. தமக்குத் தலைமை வகித்து வழிநடத்துவதற்காக தமது தலைவர்களைத் தமிழ்பேசும் மக்கள் மதம்மாறும்படி நிர்ப்பந்திக்கவில்லை என்பது தமிழ்பேசும் மக்களின் பெருமைக்குரிய விடயம் என்று கூறினுர் அவர்.

திரு. செல்வநாயகம் அவர்களுக்கும் தந்தைக்குமிடையிலான உறவுகள் பற்றி மீண்டும் கவனிப்போம். தந்தை ஒருவன் அளிக்கக்கூடிய மேற்பார்வையும் வழிகாட்டலும் இவருக்குக் கிடைக்கவில்லை. இந்த வெற்றிடத்தின் சில அம்சங்களை வண. பொன்னையா அவர்கள் ஈடு செய்தார். ஆயினும் குழந்தைப் பருவத்திலிருந்து நிறைந்த மனிதனுகப் பரிணமிக்கும் நிகழ்ச்சியில் திரு. செல்வநாயகம் போன்ற அசாதாரண உணர்ச்சிமிக்க ஒருவருக்கு தந்தையின் பரிசம் கிடைக்காமை மிகப் பெரிய ஒரு நட்டம் எனவே கொள்ளவேண்டும். எனக்குத் தெரிந்த வரை தனக்குக் கிடைக்காதுபோன இந்த நட்டத்திலிருந்து தன்னை அவர் விடுவிக்க முடியவில்லை. தந்தை ஒருவன் மாத்திரமே தனது பிள்ளைக்குக் கொடுக்கக்கூடிய அன்ருட அன்புக் கவனமும் வழிகாட்டலும் இவரது வாழ்க்கையில் பெரிதும் வறிதாகிவிட்டன. இந்த வறுமையின் காரணமாகத்தான் பெயர்பெற்ற உளவியற் தத்துவாசிரியர் எறிக் எறிக்சன் சொல்லி வைத்ததையும் பெரிய ஜேர்மன் சீர்திருத்தவாதி

யாகிய மாட்டின் லூதர் சாதிக்க முயன்றதையும் இவரால் செய்து முடிக்க வைத்தது. அன்புத்தந்தை ஒருவரின் பாசக்கடல் மறுக்கப்பட்ட இந்த மனிதர் தமிழ்பேசும் மக்களுடன் தான் ஏற்படுத்திக்கொண்ட உறவின் தன்மைமூலம் ஈற்றில் அந்த நட்டத்தை ஈடு செய்வதில் முயன்று வெற்றியும் கண்டார். யோசனைமீதோ தன்னறிவில் நின்றோ அவர் அதைச் செய்தார் என்று கூற நான் முற்படவில்லை. ஆனால் திருவாளர் செல்வநாயகம் போன்ற கூருணர்ச்சி கொண்ட ஒரு நபரின் தன்னறிவற்ற மூளைப்பகுதியினதோ சூழ்நிலை மூளைப்பகுதியினதோ இருண்டிருக்கும் பாதாளப் பிரதேசங்களைத் தேடிப் பார்க்க முடியுமாயின் ஒருவேளை தான் செய்ததைத் திரு. செல்வநாயகம் ஏன் செய்தார் என்பதற்கு ஒருவர் விடைகாண முடியலாம்?

தந்தையிடமிருந்து பெற முடியாதவற்றிற்கு இரண்டு வழிகளில் இவருக்கு நட்டஈடு கிடைத்தது. ஒன்று, தந்தை அளிக்க முடியாதவற்றைத் தனது சொந்த மக்களின் இலட்சியத்தில் தன்னைத் தியாகம் செய்வதுமூலம் ஈடு செய்ய முயன்றார். இவர் இம் மக்களுக்குத் தந்தை ஆனார். கீழைத் தேயத்தில் வழமையில் காணக்கூடிய சாதாரணத் தந்தையல்ல. தாமே தந்தை உருவம் ஒன்றைத் தேடித்திரிந்த ஒரு மக்களுக்கு எல்லைமீறிய கவனமும் பாசமும் சொரியும் ஒரு தந்தை ஆனார். அவருக்குத் தனது தந்தை கொடுக்க இயலாது போனவற்றை அவர் இருமடங்காகத் தனது மக்களுக்கு வழங்கினார். இவ்வாறே தனது இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு இத்தனை வார்த்தைகளில் திரு. செல்வநாயகம் ''உங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பேன்; உங்களுக்கு ஒரு பெயரும் முகவரியும் கிடைக்க வைப்பேன்; மொழி, ஆடல், பாடல் என்பனகொண்ட அடுக்கணிகளையும் உங்களுக்குக் காட்டுவேன்'' என்று கூறிவைத்தார், ஜூன் 1956இல் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ''சிங்களம் மாத்திரமே'' என்ற நெருக்கடி தமிழ்பேசும் மக்களை எதிர்கொண்டபோது திருவாளர் செல்வநாயகத்துக்கு அதற்கான வாய்ப்புக் கிடைத்தது. தமது நாட்டு மக்களுக்கு அவர் தந்தை வடிவமானார். அவர்களின் தாய் நாட்டின் தந்தையானார்.

மாட்டின் லூதர் கிங்ஐப் பற்றி எறிக் எறிக்சன் கூறியவகையில், திருவாளர் செல்வநாயகம் தன்னைப்பொறுத்தவரை தான் விடுவிக்க முடியாத ஒரு சிக்கலை அனைவரையும் பொறுத்தவரை தான் விடுவிப்பதற்குத் தன்னை அர்ப்பணித்து முனைந்தார். தந்தையற்ற இளமைப் பராயத்தைப்பற்றி மேல் மனதுக்கு வரவிடப்படாது அடி மனதுக்குள் நசுங்கிய அறிவுநிலை, இறுதியில், அனாதைகளாகிவிட்ட தமிழ் மக்களுக்குத் தந்தையாகிய கதையாக முடிந்தது. தமிழ்மக்களும் தம்மைப் பொறுத்தவரை அவரைத் தந்தையாகவே பார்த்தனர். இதனால்தான் அவரது மக்கள் அவரை அன்புடன் ''தந்தை செல்வநாயகம்'' என்றனர். சமீப

கால வரலாற்றில் இதேபோன்ற வேறு ஒரேயொரு உதாரணம் நவீன துருக்கியின் மக்களாவர். அழிவிலும் சிதைவிலுமிருந்து தன்னுட்டு மக்களைக் காப்பாற்றிய முஸ்தாபா கெமால் பாஷாவைத் துருக்கி மக்கள் கெமால் அத்தாதேக் என்றழைத்தனர். அதன் பொருள் ''துருக்கியரின் தந்தையாகிய கெமால்''.

இல்லத்தில் கண்ணெதிரே தெரியக்கூடிய தந்தை ஒருவருக்குக் குழந்தையாகத் தான் அளிக்க இயலாமற்போய்விட்ட அன்பையும் பாசத்தையும் தமிழ்பேசும் மக்களிடமிருந்து தான் பெற்ற அன்பும் பாசமும் மூலம் இவர் ஈடுசெய்தார். இந்தவகையில் இது அவரது இரண்டாவது வழி. வளரும் ஒரு குழந்தையின் வாழ்க்கையில் இது பெரிய ஒரு நட்டம். தனது தந்தைக்கு இவர் தெரிவிக்க இயலாது போய்விட்ட இந்த உன்னத உணர்ச்சிகளைத் தமிழ் பேசும் மக்கள் இவருக்குப் பலமடங்காக அளித்தனர். அவரும் தந்தையாக அவர்களை நேசித்தார். இதுபற்றி மூன்று உதாரணங்களைக் கூறுகின்றேன். இவற்றுள் இரண்டை இவரிடமிருந்தே அறிந்தேன். இவரது நெருங்கிய நண்பரும் முன்னுள் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினரும், தன்னளவில் தமிழ்த் தேசிய இயக்கம் ஒன்றின் தாபகருமான திரு. வ. நவரத்தினம் பற்றியது ஒரு கதை. திரு. வ. கந்தையாவின் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திரு. வ. நவரத்தினம் போட்டியிட்டார். தேர்தற் பிரசாரத்தின்போது திரு. நவரத்தினம் '' என்னை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டார்'' என்று திரு. செல்வநாயகம் எனக்குக் கூறினுர். ''நன்ருகப் பயன்படுத்தினுர்'' என்ருல் விளக்கம் என்ன என்று நான் கேட்டேன். திரு. நவரத்தினம் தொகுதியின் பல்வேறு பகுதிகளுக்கும் தன்னைக் கொண்டுசென்றதாகவும் மக்கள் தன்னைத் தொட்டுப் பார்ப்பதற்கென்று விழுந்தடித்தார்கள் என்றும் அவர் கூறினுர். தனது தந்தையைத் தொட்டுப்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்காத ஒரு குழந்தை காலப்போக்கில் தனது சொந்த மக்கள் தன்னைத் தொட்டுப்பார்க்கும் அனுபவத்துக்கு ஆளாகியது. அடுத்த இரண்டாவது சம்பவமும் இத்தகையதே. வயதுசென்ற நிலையில் 'பாக்கின்சன்' நோயினுல் வருத்தப்பட்டுக் காய்ந்த நிலையில் தனது காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள வீதி ஒன்றில் நடந்து போய்க் கொண்டிருந்தார். மூதாட்டி ஒருவர் தன்னை அணுகி வியப்பும் மதிப்பும் தொனிக்க தனது தள்ளாத வயதிலும் தலைவரைப் பார்த்து ''வயோதிபரே! இந்த மூப்பு வயதிலும் தமிழர்களுக்காக நீங்கள் போராடிக்கொண்டிருப்பது மிக நல்லது'' என்ருராம். தன் அலுவலாக மீண்டும் தன்பாட்டில் போக ஆரம்பிக்குமுன்னர் அம் மூதாட்டி ''போராட்டத்தை மட்டும் விட்டுவிடாதீர்கள்'' என்று கூறினுராம். தனது தந்தையிடம், பாதுகாப்பைத் தேடும் குழந்தையின் மனுேபாவத்தில் அமைந்தது இது. மூன்ருவது சம்பவம் இவர் மறைந்த சில நாட்களில்

டாக்டர் எம். சி. எம். கலீல் பாராட்டுரை நிகழ்த்தும்போது கூறிய விடயமாகும். ஜனுப் கலீல் திருவாளர் செல்வநாயகம் மறைவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னர் வவுனியா மக்கள் நடத்திய அவரது பிறந்த தினக் கூட்டத்தில் தான் பங்குபற்றியதாகவும் அது ஒரு விழாக்கோலம் பூண்டிருந்ததாகவும் குறிப்பிட்டார். அலங்கரிக்கப்பட்ட நகருக்கூடாக வாகனம் ஒன்றில் செல்வநாயகம் அவர்கள் முன்னுல் செல்ல அவருக்குப் பின்னுல் ஓர் ஊர்வலம் வந்தது. அதன்பின்னர் அவர் கதிரையில் அமர்ந்திருக்கும்போது அவர் அதை விரும்பாதபோதிலும் ஆண்களும் பெண்களுமாகப் பலர் அவர் முன்னுல் வந்து முழந்தாளிட்டு அவரது பாதத்தை முத்தமிட்டனர். தனது மக்களுக்கு ஒரு பெருந் தலைவன் ஆற்றிய தன்னலமற்ற சேவைக்கு மக்கள் செலுத்திய கௌரவமும் மரியாதையும் திரு. செல்வநாயகம் தனது தந்தைக்கு அளிக்கமுடியாது போய்விட்டதைத் தமிழ்பேசும் மக்கள் திரு. செல்வநாயகத்துக்கு அளித்தார்கள் என்பது எனது விளக்கம்.

திரு. செல்வநாயகத்தின் தலைமைபற்றி எட்டளவுக் கருத்துணர்வுகளைச் சிறிது விரிவாகக் கூறி விட்டேன். அவரைத் தலைவராக உருவாக்கிய சில வாழ்க்கை அம்சங்களைத் தொட்டு இப்போது சில கூற விரும்புகின்றேன். அவரது குழந்தைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் அசாதாரணமான சம்பவம் எதுவுமிருக்கவில்லை. ஆனுல் படிப்பில் மிகவும் கவனஞ் செலுத்தினுர். வகுப்பில் திறமை காட்ட வேண்டும். ஏனையோரை முந்தி நிற்க வேண்டும் என்று உழைத்தார். தந்தை இல்லாத இடத்தில் அவரது தாயாரின் செல்வாக்கு இவர் மீது அதிகமாக இருந்தது. இலண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்றதும் ஆசிரியராகத் தொழில் புரிந்தார். இக் காலத்தில் உவெஸ்லியைச் சேர்ந்த பி. எச். நோனிஸ் என்பாரின் நட்புக்கு ஆளாகினுர். இவர்களிடம் இந்த நட்புறவு நீடித்துத் தொடர்ந்தது. ஆசிரியத் தொழிலில் இவரது அனுபவங்கள் அனைத்தும் சுமுகமானவையாக இருக்கவில்லை. சென்ற் தோமஸ் கல்லூரி மேற்பார்வையாளர் ஸ்ரோன் என்பாருடனும் உவெஸ்லியின் வணக்கத்துக்குரிய ஐபீல்ட் என்பாருடனும் அவர் முரண்பட வேண்டியிருந்தது. இந்தச் சந்தர்ப்பங்களில் அவரிடம் சுதந்திர உணர்வும் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையும் பரந்து நின்றன. தமிழ் பேசும் மக்களின் தேசிய அரசியலில் தீவிரமாகப் பங்கெடுத்த பொழுது இக்குணுதிசயங்கள் அவருக்கு அருந்துணையாக அமைந்தன. இந்தக்காலத்தில் தேசிய உடை அணிந்தார். கர்நாடக சங்கீதம் பயின்ருர். வாழ்க்கையின் பிற்பகுதியில் அவர் மேற்கொண்ட வலுவான தமிழ்த் தேசியத்துக்கு இவை ஆரம்ப சான்றுகளாக அமைந்தன. ஆசிரியத் தொழிலிலிருந்தவாறே ஏனையோர் சிலரைப்போல அவர் சட்டம் பயின்று தகைமை பெற்றுர். கொழும்பில் குடியேறி பிரபல்யம் வாய்ந்த தமிழ் யூனியனில் உறுப்பினராகிக் கொழும்புச் சமுதாயத்தின்

உயர் மட்டத்தாருடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்த போதும் அவர் உடலாலும் உள்ளத்தாலும் ஒரு யாழ்ப்பாணத்து வாசியாகவே இருந்தார். உறுதியான கொள்கையடிப்படையில் அவர் கொழும்பில் வீடோ வேறு ஏதேனும் ஆதனமோ வாங்கிக் கொள்ள விரும்பவில்லை. விடுமுறை தினங்களைத் தனது குடும்பத்தாருடன் சொந்த ஊராகிய தெல்லிப்பளையில் கழித்து வந்தார். அவர் இரு உலகங்களில் வாழ்ந்தார் என்று ஓரளவுக்குக் கூறலாம். தமிழ்க் கலாச்சாரம் தமிழ்த் தேசியம் ஆகிய நிச வாழ்க்கை இவற்றில் ஒன்று. மற்றது ஒரு செயற்கை உலகம் ஆகும். அவரது நிச உலகத்துக்கு ஒரு பதிலீடு என அமைந்த கொழும்பு நண்பர்கள் வட்டத்தைக் குறிப்பிடலாம்.

திரு. செல்வநாயகம் பொழுது போக்கில் என்று கூறக்கூடிய வகையில் தேயிலைத் தோட்டங்களில் முதலீடு செய்தார். நோய்க்கும் மூப்புக்கும் எதிரான ஒரு பாதுகாப்பு இது என நான் நம்புகிறேன். ஆயினும் 1940ஐ அடுத்து வந்த காலங்களில் தமிழுரிமைக்கான தீவிர இயக்க காலங்களில் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்கக்கூடிய ஒரு நிலையை இந்தத் தேயிலைத் தோட்ட முதலீடுகளில் அவர் பெற்ற வெற்றிகள் உறுதிப்படுத்தி உதவின. இந்தத் துறையில் அவருக்கு நல்ல சில நண்பர்கள் வந்து சேர்ந்தனர். பின்னர் பிரதம நீதியரசராகிய சேர். எட்வேட் ஜெயதிலக்கா தனது தலைமுறையில் அரசியல் மாந்திரீகனாக விளங்கிய சேர் ஒலிவர் குணதிலகா, தொழில் அதிபர் திரு எம். மதியாபரணம், கொழும்பு வழக்கறிஞர் திரு கே. ரி. சிற்றம்பலம், நீதிபரிபாலனதுறையைச் சேர்ந்தவரும் பின்னர் உயர் நீதிமன்ற நீதியரசராகியவருமான திரு. என். சின்னத்தம்பி ஆகியோர் இந்த நிரலில் இடம்பெற்ற பிரமுகர்களாவர்.

தேயிலைத் தோட்டத்துறையை விட அவரது வாழ்க்கையின் முற்பகுதியில் அவர் சிவில் சட்டத்துறையில் தளராத ஈடுபாடு கொண்டிருந்தார். இந்தத்துறையில் பெருவெற்றியும் கண்டார். இதற்கு அளித்த கணிப்பாக திரு. என். கே. சொக்சி என்பாருடன் இவருக்கு 1946 இல் ''இராணி வழக்கறிஞர்'' பட்டம் கிடைத்தது. சட்டத் துறையில் கால்வைத்தபோது, தான் இலங்கை உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக வரவேண்டும் என அவர் தனது குடும்பத்தினருக்குச் சொல்வது வழக்கம் என அறிகின்றேன். அன்று பிரதம நீதியரசராக இருந்த சேர் ஜோன் ஹாவாட் வடிவத்தில் விதிவந்து தட்டியது. 1946க்கும் 1948க்கு மிடைப்பட்ட காலத்தில் ஒருமுறையல்ல இரண்டு முறையல்ல மூன்றுமுறை அப்பதவியை இவருக்கு அளிக்க முன் வந்தார்கள். ஆனால் அந்தக் கட்டத்தில் அவர் தமிழ்த் தேசியக் கடலின் ஆழ் சுழியில் பிடிபட்டு விட்டார். தமிழ் பேசும் மக்களுக்குச் சேவை யாற்றுவதே அந்தக் கட்டத்தில் தனது பொறுப்பு என்று குடும்பத்தவரிடம் அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய இயக்கத்தில் கால் வைத்த காலத்தில் அதில் தனது பங்கு இன்னதாயிருக்க வேண்டும் என அவர் நினைத்தார் என்பது பற்றிய தெளிவான சான்று கிடையாது. திருவாளர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பிரதம தளபதியான ஒரு பங்கு அவருக்குத் திருப்தி அளித்த ஒன்று என்பதற்கு எனக்குச் சான்று உண்டு. திரு ஜி. ஜி. பொன்னம்பலத்துடனும் டாக்டர் இ. மு. வி. நாகநாதனுடனும் சேர்ந்து அனைத்திலங்கைத் தமிழ்க் காங்கிரசை அமைப்பதில் தீவிரமாக அவர் உழைத்தார். 1944 இல் சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சிய மளிப்பதில் திரு. பொன்னம்பலத்துக்கு இவர் உதவியாக இருந்ததால் 1947 இல் பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்கள் சிலரைப் பொறுக்கி யெடுப்பது இவரது பொறுப்பாக இருந்தது. குறிப்பாக, பின்னர் தனது நண்பர் டாக்டர் வி. கே. பரமநாயகத்தின் மருமகனை வரவிருந்த சாவகச்சேரி வேட்பாளர் திரு. வி. குமாரசாமி, திருகோணமலை வேட்பாளர் திரு. எஸ். சிவபாலன் ஆகிய வெற்றி பெற்ற வேட்பாளர்கள் இருவரும் இவர் தெரிந்தெடுத்த ஆட்களாவர். அத்துடன் பருத்தித்துறையில் போட்டியிடும்படி அத்தொகுதியில் வெற்றிபெற்ற திரு. ரி. இராமலிங்கத்தை நெருக்கிப் போட்டியிட வைத்தவரும் இவரேயாவர். காங்கேசன்துறையில் இவர் போட்டியிட்டு நல்ல பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார். அவர் கஷ்டப்பட்டுச் சட்டத்துறையில் உழைத்த பணம் அனைத்தையும் பின்னர் கரைத்து விட்டதுமான ''சுதந்திரன்'' பத்திரிகையை அவர் ஆரம்பித்ததும் இந்தக் காலகட்டத்திலேயாகும்.

தேசிய இயக்கத்தின் தலைமையில் அவர் வேட்கை காட்டாதவர் என்பதற்கு எனக்கு மூன்று சாட்சியங்களுண்டு. தமிழ் இலட்சியத்துக்காக அவரது நண்பர் நீதியரசர் சேர். எட்வேட். ஜெயதிலக்காவின் கருத்துப்படி திரு. செல்வநாயகம் செய்த தேவையற்ற தாங்கொணாத தியாகங்களைப்பற்றி திரு. ஜெயதிலகா எனது முன்னிலையில் திரு. செல்வநாயகத்தைக் கண்டித்துப் பேசினார். தமிழிலக்கியத்தின் தலைமையை மேற்கொள்ளத் தான் எதிர்பார்க்கவில்லை என்றும் திரு. பொன்னம்பலம் தொடர்ந்து நடத்துவார் என்றும் 1948இல் திரு. பொன்னம்பலம் திரு. டி. எஸ் சேனநாயக்காவின் அரசாங்கத்தில் சேர்ந்ததும் யாரோ ஒருவர் அந்த இடத்தை நிரப்பாதிருப்பது தவிர்க்கப்பட வேண்டியது என்றும் திரு. செல்வநாயகம் பதிலளித்தார். சந்தர்ப்பம் சூழ்நிலையால் அந்தப் பொறுப்புத் தன் தோள்மீது விழுந்துவிட்டது என்றும் அவர் கூறினார். மீண்டும் 1953இல் 'பாக்கின்சன்' நோய் பரவிப்பிடிக்கவே அவர் திருவாளர் நடேசனுக்கு எதிராகத் தொடுத்த தேர்தல் வழக்கில் வெற்றி கண்டால் முழுநேர அரசியலிலிருந்து விலகிக்கொள்ள விரும்பியிருந்தார். அப்போது கோப்பாய்ப் பிரதிநிதியாக இருந்த திருவாளர் வன்னியசிங்கத்திடம் இயக்கப் பொறுப்பை ஒப்படைத்துவிடவும் விரும்பினார். இவரை மீண்டும் தமிழியக்கத்துக்குள் தள்ளிவிட்டவர் நீதிபதி

கே. டி. த. சில்வா ஆவர். இவர் திரு. நடேசனுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார். இதனுல் திரு. செல்வநாயகத்தின் ஆதரவாளர்கள் அவமானத்தால் ஆத்திரமுற்றனர். நீதிபதியின் கூற்றுகள்பற்றிக் கோபமடைந்தனர். நீதிபதி வழங்கிய தண்டனைத் தன்மையான செலவு தொகை காரணமாகத் திரு. செல்வநாயகமும் முடங்கிப்போனுர். தொகை 90,000/- ரூபா ஆகும். 1953இல் அதன் பெறுமதியோ மிகக் கூடியதாகும். கடன் என்று உதவும் வகையில் ஓரளவுக்கு அவரது நண்பர் சேர் எட்வேட் ஜெயதிலக்கா உதவினுர். இத்தகைய மானக்கேடான தீர்ப்புக் காரணமாகத் திரு. செல்வநாயகம் தமிழ் மக்களின் தலைமையினைத் தொடராது இருக்கமுடியாது என அவரது பிரதம தளபதிகள் வற்புறுத்தினுர்கள். ஈற்றில் இவரது தலையில் பொறுத்துவிட்ட தலைமைப் பதவிக்குத் தான்தான் கழுத்துக் கொடுக்க வேண்டிவரும் என்பதை அவர் எதிர்பார்த்தேயிருந்தாரோ என நான் சந்தேகிக்கும்படியான கதை ஒன்றை அவர் என்னிடம் கூறினுர். திருவாளர் வன்னிய சிங்கத்தின் மறைவினுல் பெரிதும் அதிர்ந்துவிட்ட இவரிடம் அடுத்து யார் தலைமை தாங்கப் போகிருர்கள் என நான் கேட்டபோது நேரடியாக அவர் எனக்குப்பதில் கூறவில்லை. திரு. பொன்னம்பலம் மந்திரியானதும் அவர் இதுவரை தமிழ் மக்களுக்கு அளித்துவந்த வீருப்பும் ஆக்ரோஷமும் நிறைந்த தலைமைக்குத் தன்னைப்போன்ற சாந்தமும் பணிவும் கொண்ட ஆள் ஒருவர் பதிலீடாக முடியாதென நினைத்த தமிழ் மக்கள் பலர் இருந்தார்கள் என்ருர். கால ஓட்டத்தில் ஒரு இடைவெளி தோன்றியது என்ருர். ஆனுல் ஈற்றில் வேருெரு தன்மையான தலைமையை அளிப்பதில் அவர் வெற்றியடைந்தார். இதேபோலத்தான், தான் அரசியல் மேடையிலிருந்து அகலும்போது அந்தத் தருணத்தின் சூழ்நிலை உரியதலைவரைத் தோற்றுவிக்கும் என்று அவர் கூறினுர். என்றுமே தன்னடக்கமுடையவரான திரு. செல்வநாயகம் தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைமையைத் தேடிப் போனதில்லை என்பதே இந்தச் சம்பவங்களின் தாற்பரியமாகும். ஆயினும் திரு. பொன்னம்பலத்தின் விலகலால் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று தான் உணர்ந்தபோது நான் எனது பேச்சின் ஆரம்பத்திற் குறிப்பிட்ட வசிகரத் தலைமைத்துவத்தின் குணதிசயம் அவரில் மேலோங்கியது. குழம்பியிருக்கும் சூழ்நிலை ஒன்றில் வாளாவிராது தலையிட்டே தீரவேண்டும் என்ற அடக்கமுடியாத நிர்ப்பந்தம் இவரிடம் தோன்றியது. அரசியல்வாதி எவரும் ஏமாற்ற முடியாத அளவிற்கு யாழ்ப்பாணத்தான் மிகவும் புத்திசாலி என்றும் தமது நலவுரிமைகளை எப்படிப் பேண வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும் என்றும் எனது சிங்கள நண்பர் ஒருவர் என்னிடம் கூறியதை அவரிடம் நான் கூறினேன். தமிழ் மக்களுக்குத் தவருன வழிகாட்டப்பட்டது என்றும் தம்மில் ஒரு முக்கிய பகுதியின் வாக்குரிமை பறிக்கப்படுவதற்கு அவர்கள் தம்மையறியாமலே ஒரு பங்காளிகளாகிவிட்டனர்என்றும் ஜனநாயகம் என்பது எண்ணிக்கையில் தங்கியது என்றும்

பதில் கூறினுர். அத்துடன் தமிழ்பேசும் மக்கள் தமது பாரம்பரிய தாயகத்தில் சிங்கள அரசாங்கம் சிங்களக்குடியேற்றங்களே அமைக்க அனுமதித்து விட்டார்கள் என்றும் கூறினுர். எனவே மீண்டும் ஒருமுறை அவர்கள் தவருக வழிநடத்தப்படலாம் என்பது அவரது கருத்தாக இருந்தது. இவ்வாறு ஒரு நிகழ்ச்சி இடம்பெற விடக்கூடாது என்பதே தனது பணி என்று அவர் உணர்ந்தார்.

நெருக்கடியில் தலேயீடு என்ற வகையில் மிகவும் துணிகரமானதும் புதுமைமிக்கதுமான அவரது செயல்கள் அதாவது தலேவர் விரும்பும் திசையில் மக்கள் அபிப்பிராயத்தைச் செலுத்தவைத்தல், பயன்கொடுக்க வல்ல பொறுத்த தருணத்தில் தாக்குதலே நடாத்துதல் என்பனபோன்ற சாகசங்களேத் திரு. செல்வநாயகம் 1956 — 1977 ஆகிய 21 வருட காலத்தில் தமிழ்பேசும்மக்களின் அபிமான வீரளுக உயர்ந்துநின்று நடாத்தினுர். இந்தச் சாகசங்கள் அவரது பாரிய இயக்கங்களில் இடம்பெற்றன. அன்னுரின் தலேமைப்பாணியை நடைமுறைப்படுத்திய வேறெந்தத் தலேவரும் அத்துணே குறுகிய காலத்தில் அத்துணே பாரிய சாதனேகளேச் சாதித்ததில்லே. இதேயளவு 21 ஆண்டுகாலத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராகப் போரிட்ட மாபெரும் தலேவர் மகாத்மாகாந்திகூட மூன்றே மூன்று சத்தியாக்கிரக இயக்கங்களே மாத்திரம்தான் நடாத்தினுர். அவையாவன 1921இல் நிகழ்த்திய இரௌலட் சத்தியாக்கிரகம்; 1930இல் நிகழ்த்திய உப்புச் சத்தியாக்கிரகம்; 1942இல் நிகழ்த்திய மாபெரும் ஆகத்துப் போராட்டம். திருவாளர் செல்வநாயகத்தின் சாதனேகள் பலதரப்பட்டவை. எண்ணிக்கையில் பரந்தவை. முதலாவதாக 1956 ஏப்ரலில் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் சின்னமான தனது தமிழரசுக் கட்சியின் தலேவராக மாபெரும் தேர்தல் வெற்றி கண்டார். தமிழ் பேசும் மக்களின் தலேவரானுர். இரண்டாவதாக 1956ல் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் சிங்களம் மாத்திரம் என்ற சட்டமூலத்திற் கெதிராகக் காலிமுகச் சத்தியாக்கிரகத்தை நடாத்தினுர். இந்தக் குடியியற் கண்டனம் இலங்கையின் சில கேந்திரப் பகுதிகளில் தொடர்ச்சியான அதிர்ச்சி அலேகளேக் கிளப்பி விட்டது. ஒரேமொழி என்ற கொள்கையில் வற்புறுத்தி நிற்க வேண்டாம் என்று பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கு அது ஒரு எச்சரிக்கையாக அமைந்தது, மூன்ருவதாக தமது கட்சியின் தலேவராக அவர் 1956 ஜுலே ஆகத்து மாதங்களில் வரலாற்றுப் புகழ் பெற்ற திருமலே யாத்திரையை நடாத்தினுர். அதன் முடிவில் ஆகத்து 19இல் அங்கு கூடிய தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றிய நான்கு தீர்மானங்களுமே 1957 முதல் இலங்கையில் இருந்த அனேத்து அரசாங்கங்களுடனும் தமிழ்ப் பிரச்சினே தொடர்பான பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் அடிப்படை

யாக அமைந்தன. நாலாவதாக இந்த நான்கு தீர்மானங்களுமே இவர் பிரதமர் பண்டாரநாயக்காவுடன் 1957 ஜுலையில் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையுமாக அமைந்தன. இந்த பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் தமிழ்த் தேசிய இனத்தின் கட்டமைப்பின் மூன்று பிரதான நிலைகளை ஏற்றுக்கொண்டது. இவற்றுள் முதலாவது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் மரபுவழித் தாயகம் என்ற உரிமை. இரண்டாவது, இலங்கையிலுள்ள தேசிய சிறுபான்மை இனத்தின் மொழியாகத் தமிழ் மொழியின் பிரயோகம். மூன்றாவது, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு பிரதேசத் தன்னாட்சி வழங்குதல் என்பனவாகும். தனது நெருங்கிய நண்பர் இராணி வழக்கறிஞர் திரு. எச். வி. பெரேராவிடம் திரு. செல்வநாயகம் இந்த உடன்படிக்கையைக் காட்டியபொழுது இதன்பிரகாரம் திரு. செல்வநாயகம் பிரதமருக்கு எதையும் விட்டுக்கொடுக்கவில்லை என்று பாராட்டுத் தெரிவித்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்த இவ்வுடன்படிக்கை கௌரவிக்கப்படவில்லை. அதற்குத் தேவைப்பட்ட சட்டவாக்கத்தைச் செய்வதற்கும் பிரதமருக்குப் போதிய ஆதரவு இருக்கவில்லை என்பதை திரு, செல்வநாயகம் மெல்லமெல்ல உணர்ந்தார். எனவே 1958 மார்ச் ஏப்பிரல் மாதங்களில் இவர் 'சிங்களம் மாத்திரமே' என்பதற்கெதிராகத் தனது ஐந்தாவது இயக்கத்தை ஆரம்பித்தார். சிங்கள ஸ்ரீ பேரூந்திகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்தன. இதை எதிர்ப்பதில் திரு, செல்வநாயகமும் அவரது தமிழரசுக்கட்சியினரும் முன்னணியில் நின்றனர். சிங்கள ஸ்ரீ அழிக்கப்பட்டு பதிலாகத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. சிங்களத் தென்னிலங்கையில் பலாத்கார விளைவுகள் ஏற்பட்டன. தடுமாறிய பிரதமர் 1958 மேமாதத்தில் அவசரநிலையைப் பிரகடனப்படுத்தி ஆட்சி அதிகாரத்தில் ஏறத்தாள அனைத்தையும் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக்காவிடம் ஒப்படைத்தார். தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் திரு. செல்வநாயகம் உட்பட கைதுசெய்யப்பட்டு அவசரநிலை ஒழுங்கு விதிகளின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். சிங்களச் ஸ்ரீ பேரூந்திகளுக் கெதிரான இந்தச் சவால் காரணமாக மட்டக்களப்பு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டார். ஒரு வாரச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. சிறையிலிருந்து விடுதலையானதும் நோய்வாய்ப்பட்ட இந்த வீரனை வரவேற்க மட்டக்களப்பு நகரம் களியாட்ட உணர்ச்சியில் அல்லோலகல்லோலப்பட்டது. 1960 மார்ச்மாதப் பொதுத் தேர்தலில் தனது கட்சிக்குத் தலைமைதாங்கிச் சுலபமாக ஈட்டிய வெற்றி இவரது ஆறுவது இயக்கம். ஆயினும் இந்த வெற்றிகளிலும் பார்க்க தீர்க்கமான முடிவுகள் இனிமேல்தான் எடுக்கப்படவேண்டியதாயிருந்தன. புதிய பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்குமிடையிலான எண்ணிக்கைச் சமநிலை இவரது கட்சியின் கையிற்றானிருந்தது. சிறு

பான்மை அரசாங்கமான டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும்படி எல்லாவிதமான நெருக்குவாரமும் பிரயோகிக்கப் பட்டன. அவரது நெருங்கிய நண்பன் சேர் எட்வேட் ஜெயதிலகா, இன்னுமொரு நெருங்கிய நண்பன் திரு. அருணுசலம் மகாதேவா, இலங்கை ஞேமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பெரிய பிரமுகர் ஒருவர் ஆகியோர் இவரைப் பெரிதும் நெருக்கினுர்கள். ஆனுல் அவர் அதற்கு ஒரு விலே கேட்டார்: 1957ஆம் ஆண்டின் பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை டட்லி அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். என்ருர். பிரதமர் டட்லி இதற்கு இசையவில்லே. ஆனுல் சிறீ இலங்கா சுதந்திரக்கட்சியினரோ தமது காலஞ்சென்ற கட்சித் தலேவர் பண்டாரநாயக்காவின் கொள்கையில் ஓர் அம்சம்தானே அந்த ஒப்பந்தம் என்று கூறி அதைச் செயற்படுத்தத் தயக்கமின்றி உடன் பட்டார்கள். டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவினுல் ஏப்பிரல் 1960இல் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்துவந்த 1960 ஜுலே தேர்தல் திரு. செல்வநாயகத்தின் ஏழாவது போராட்டமாக அமைந்தது. இந்தத் தேர்தலிலும் இவரது தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரு வெற்றிகண்டது. எனினும் வரவிருந்ததோ கசப்பான ஏமாற்றமாகும். சுதந்திரக்கட்சித் தலேவர்கள் தமது வாக்குறுதியைப் பேணப்போவதில்லே என்பது விரைவில் தெளிவாகியது. மாருக அவர்கள் சிங்களம் மாத்திரமே என்ற சட்டத்தை முழுமையான அளவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தார்கள். 1961 மார்ச் மாதம் திருவாளர் செல்வநாயகம் தமது வாழ்நாளில் மிகவும் தீர்க்கமான ஒரு முடிவை மேற்கொண்டார். அந்த மாதத்து ‘சிலோன் டெயிலிநியூஸ்’ பத்திரிகைப் பிரதிகளின் பக்கங்களேப் புரட்டிப் பார்த்தால் அவற்றுள் முதற்பக்கம் ஒன்றில் வயதினுல் வாடி ‘பாக்கின்சன்’ நோயால் உதறிக்கொண்டிருக்கும் கந்தையுடை தரித்த உருவம் ஒன்று யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் நின்று அரசாங்க ஊழியர்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்துக்கொண்டிருக்கும் படம் ஒன்றைக் காணலாம். கடுமையான நோயுடன் வயதினுல் குனிந்துநின்ற தட்டந் தனியனுன, இரங்கத்தக்க நிலேயில் நின்ற அந்த ஆள்தான் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஆவர். படத்தில் தட்டந்தனியாகத்தான் அவர் நின்ருர். சிங்கள மொழியில் கருமமாற்ற வேண்டாம் என்று தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துக்கொள்கிருர். தனியாள் ஒருவரின் தளர்ச்சியுற்ற முயற்சியாக ஆரம்பத்தில் தோன்றிய இந்த நிகழ்ச்சி விரைவில் ஒரு சுழற்காற்று இயக்கமாகச் சீறியது. ஒரு சில நாட்களுள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதான நகரங்களில் பல்லாயிரக்கணக்கில் சத்தியாக்கிரகிகள் சத்தியாக்கிரகத்தில் குதித்தனர். அரசுக்குள் ஓர் அரசு நிறுவப்படலாயிற்று. திரு. செல்வநாயகத்தின் மிக நெருங்கிய நண்பர்களிலொரு

வரும் பின்னர் மூதவை உறுப்பினராக இருந்தவரும் வழக்கறிஞர் ஆகியவருமான திரு. சு. நடராசா தமிழரசுக்கட்சியின் அஞ்சலதிபர் நாயகமாகி யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஒரு தபாற்சேவையை நிறுவி நடாத்தினுர். இவர் நடாத்திய அஞ்சல் அலுவலகங்களில் நினைவுக் கெட்டிய காலத்தில் வெளியிடப்பட்ட மிக அபூர்வமான சில முத்திரைகள் விற்பனைக்கு வந்தன. அடுத்து காணி விநியோக அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது. தமிழ் பேசும் விண்ணப்பதாரருக்குக் காணி வினியோகிக்கப்பட்டது. தமிழ் பேசும் பிரதேசங்களில் சிங்கள அரசாங்கத்தின் ஆணை சிதைந்தது. இதனினும் காத்திரமாக மலைநாட்டுத் தமிழர்கள் அரசியல் எழுச்சியூட்டப்பட்டனர். திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்துக்கெதிராக அனைத்திலங்கைத் தமிழ்ச் சத்தியாக்கிரகம் ஒன்று உருவம் எடுக்குமோஎன ஒருகணம் தோன்றியது. தொந்தரவு ஏற்படும் என்று சிறுஅளவு அறிகுறிகள் தோன்றினுற்கூடத் தோட்டங்களுக்குள் சென்று அவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை எடுக்கும்படி திட்டவட்டமான கட்டளைகள் அரசாங்கஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது எனக்கு நன்ருகத் தெரியும். ஆயினும் தேயிலை இறப்பர்த் தோட்டங்களை நிர்வகிக்கும் பிரச்சினையிலும் பார்க்கப் பிரச்சினை மிக ஆழமானது என்பதை சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை. பாரதூரம் மிக்க பிரச்சினை இருந்தது. அருகிலுள்ள இந்தியாவிலிருந்து பல்வேறு அரசியற் சக்திகள் தலையிடும் சாத்தியக்கூறு இருந்தது. முதன்முறையாக இலங்கையின் தற்கால வரலாற்றில் தமிழ்ப் பிரச்சினை உள்நாட்டு விவகாரமாக நில்லாது இந்திய உபகண்டத்தில் தனது தாக்கத்தை உணர்த்தத் தொடங்கியது. அதனிலும் மேலான ஒரு தாக்கமும் இருந்தது. இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் முதன் முறையாக ஒன்றிணைந்து ஒரேயொரு தலைமையின் கீழ் ஒரே அணியில் ஒரே குரலில் தொழிற்பட ஒருப்பட்டார்கள். அரசாங்கம் செய்ய இயன்றதெல்லாம் மிருகத்தனமான ஓர் அவசரநிலையைத் திணிப்பதாக மட்டுமே அமைந்தது. திருவாளர் செல்வநாயகம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவரது உடல்நிலை இதையடுத்துச் சீர்குலைய ஆரம்பித்தது. பிரிட்டனுக்குப் போய் மூளைச்சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கிலிங்காம் என்பாரிடம் வைத்தியம் செய்விக்க விடுத்த விண்ணப்பத்தைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா நிராகரித்தார். சத்திரசிகிச்சை நடைபெருவிட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று இரு தமிழ் டாக்டர்கள் டாக்டர் இரத்தினவேல், டாக்டர் ஜே. ஆர். உவில்சன் என்பார் அறிக்கை சமர்ப்பித்தனர். இதையடுத்து பிரிட்டனில் ஏதேனும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என்ற வாக்குறுதி ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னரே அவரைப் பிரிட்டன் செல்லப் பிரதமர் அனுமதித்தார். இதன் பின்னர் 1964 ஏப்பிரலில் எட்டாவது இயக்கம் இடம்பெறவிருந்தது. தமிழ்மொழியில் மாத்திரமே அரசாங்க அலுவல்கள் அனைத்திலும் கருமமாற்றும்படி திரு. செல்வ

நாயகமும் அவரது கட்சியும் தமிழ்ப் பேசும் மக்களை அழைத்தது. பெரும்பாலான அரசாங்க அலுவல்களில் வேலை குறிப்பிடக் கூடிய அளவில் பாதிக்கப்பட்டது.

1965 மார்ச் மாதப் பொதுத் தேர்தலையடுத்து இவரது ஒன்பதாவது தமிழுரிமை இயக்கம் இடம் பெற்றது. புதிய பாராளுமன்றத்தில் தமிழரசுக்கட்சி மீண்டும் சமநிலையைத் தீர்மானிக்கும் நிலையில் இருந்தது. இதனையடுத்து 1965 மார்ச் மாதத்து சேனநாயக்கா — செல்வநாயகம் உடன்படிக்கை ஏற்பட்டது. சில அம்சங்களில் இவ்வுடன்படிக்கை 1957ஆம் ஆண்டின் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் உடன்படிக்கையிலும் திருத்தம் அதனிலும் பார்க்க விரிவானதாகவும் அமைந்தது. தனது கட்சி சேனநாயக்கா அரசாங்கம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் ஆதரிக்கும் என்று திரு. செல்வநாயகம் மாதேசாதிபதிக்கு அறிவித்தார். அதற்குமுன்னர் தனது உடன்படிக்கையைச் செயற்படுத்துவது தொடர்பில் திரு. சேனநாயக்காவின் கருத்துறுதி பற்றி திரு. செல்வநாயகம் சான்று கேட்டார். முப்பது ஆண்டு அரசியல் வாழ்வில் தனது வாக்குறுதி எதிலும் தான் தவறியதில்லை என்று திரு. சேனநாயக்கா பதிலளித்தார். அதையடுத்து திரு. செல்வநாயகத்தின் 'தனிப்பற்றுக்குரிய மைந்தன்' என நான் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருக்கும் திரு. திருச்செல்வத்தைச் சேனநாயக்கா. அமைச்சரவைக்கு அவர் நியமித்தார். இது நல்லதொரு தெரிவு. திரு. திருச்செல்வம் கத்திமுனைபோன்ற கூர்மையுடையவர்; மூளைவேகத்துடன் செயலாற்ற வல்லவர். தமிழ்பேசும் மாகாணம் இரண்டிலும் தமிழ் மொழியை இணையான ஆட்சி மொழியாக்குவதற்குப் பொறுப்பாயிருந்தவர், இதற்கும் மேலாக, மாவட்டசபைச் சட்டமூலம் வரைவதற்குப் பொறுப்பாயிருந்தவர். இச்சட்டமூலம் சேனநாயக்கா அரசாங்கத்துக்கு ஏற்புடையதாக இருந்தது. ஆயினும் சிங்கள எதிர்ப்புக் காரணமாக இது தொடர்பான சட்டவாக்கம் கொண்டுவரப்படவில்லை. பல வழிகளிலும் எதிர்கால நோக்கு நிறைந்த இதே திருச்செல்வம்தான் தனது ஏனைய நண்பர்களுடன் சேர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்தவர். 24 மணித்தியாலத்துள் யாழ்ப்பாண பட்டினத்தில் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படும் எனச் சிரேட்ட அமைச்சர் ஒருவர் யோசனை தெரிவித்தபோது அப்பல்கலைக்கழகம் திருகோணமலையில் நிறுவப்படவேண்டும் என்றார் திரு. செல்வநாயகம். உயர்கல்வியின் பொருட்டுத் தமிழ் மாணவர்கள் திருகோணமலைக்குப் போக விரும்பாதிருக்கக்கூடும் என ஆதரவாளர் சிலர் கூறியபோது வேலை தேடித் தமிழ் மக்கள் மலாயா போயிருக்கும்போது திருமலைக்குப் போக அவர்கள் விரும்பாதிருக்க நியாயமில்லை என்றார் திரு. செல்வநாயகம். திருகோணமலை, திருகோணமலை என்று வற்புறுத்தினல் தமிழருக்குப் பல்கலைக்கழகம் கிடைக்காது போகலாம் என எச்சரித்தபோது தான்

கிழக்குமாகாண மக்களைக் கைவிடமாட்டேன் எனப் பதில் கூறினர். திரு. செல்வநாயகத்தின் வற்புறுத்தல் மீதுதான் தமிழ்ப்பல்கலைக் கழகத்துக்குத் திருகோணமலையே மிகவும் உகந்த இடம் எனத் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பகட்டத்தில் கருத்துக் கொண்டுநின்றது.

1972 இல் திருமதி பண்டாரநாயக்காவும் அன்னரின் ஐக்கிய முன்னணி அரசாங்கமும் ஒருதலைப்பட்சமாகக் குடியரசு அரசமைப்பைப் பிரகடனப்படுத்திய சந்தர்ப்பத்தில் அவர் நடந்துகொண்ட சாகச வீரம் தமிழ்த் தேசிய இயக்கத்தில் பெரும் பணி நிறைந்த அவரது வாழ்க்கையில் பத்தாவதும் இறுதியுமான செயலாகின்றது. 1972ஆம் ஆண்டுக் குடியரசு அரசமைப்பு ஒருதலைப்பட்சமான ஒரு ஆவணமல்ல என்றும் அதற்குத் தேசிய உடன்பாடு உண்டு என்றும் தாம் உரிமை பாராட்டக் கூடியதாகத் தமிழ்த்தலைவர்களின் ஒத்துழைப்பை ஐக்கிய முன்னணி அரசாங்கத் தலைவர்கள் பெறவிரும்பிய உண்மை எனக்குத் தெரியும். திரு. செல்வநாயகத்தையா ஏமாற்றுவது? அரசமைப்பை வகுத்துக்கொள்ளுவதிலுள்ள பொறிகள் மிக நிறைந்த பாதையூடாக இவர் நிதானத்துடன் அடிவைத்து நடந்தார். ஈற்றில் தான் எதிர் பார்த்ததாயிருக்கக்கூடிய பதில் இவருக்கு கிடைத்தது. சுதந்திரக் கட்சித் தலைவர்கள் தொட்டுக்கூறக்கூடிய சலுகை எதனையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையிலிருக்கவில்லை. பாரம்பரிய இடதுசாரித் தலைவர்களோ அம்பலப்படுத்திய நிலையில் நின்றனர். தொடர்ந்தும் அவர்கள் தமிழ்மொழி உரிமைகளினதோ சிறுபான்மை உரிமைகளினதோ பாதுகாவலர்களல்லர். இந்நிலையில் தமிழருக்கிருந்த ஒரேயொரு அரசியற்றலைமை தமிழரசுக் கட்சி மாத்திரமே என்றநிலை தெரிந்தது. இந்த நிலைமை மேலும் உரம்பெற்றது. பல சம்பவங்கள் இடம்பெற்றன. 1972இல் தமிழ்த் தலைவர்கள் தமது படைவரிசைகளிலிருந்த இடைவெளிகளை நிரப்பினுர்கள். தமிழர் கூட்டணி என்ற அமைப்பின் கீழ் ஒன்றுபட்டனர். தமிழ்பேசும் மக்களின் சம்மதம் இந்த அரசமைப்புக்கு உண்டு என்பதைத் தன்னேடு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நிரூபிக்கும்படி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குச் சவால் விட்டுத் திரு. செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்கம் தயங்கிநின்றது, காங்கேசன்துறை மக்கள் வாக்குரிமையற்றவர்களாக பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவரைப் பெற்றிருக்கும் உரிமையற்றவர்களாக நின்றனர். இறுதியில் 1975இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் உபதேர்தலை நடாத்தத் தீர்மானித்த பொழுது அதன் வேட்பாளரைத் திரு. செல்வநாயகமும் அவரது புதிதாய் அமைத்த தமிழர் கூட்டணியும் படுதோல்வியடையச் செய்தனர்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகத் திரு. செல்வநாயகம் நடாத்திய இவ்விடயங்கள் அனைத்தினதும் உட்கருத்து ஒன்று வெளியாயிற்று. தமிழர் இலங்கையில் குடியேறியதான வரலாற்றின் ஒளி படாத தொன்மைக் காலத்திலிருந்து முதன்முறையாக மலைநாட்டுத் தமிழர் தென்னிலங்கைத் தமிழர் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர் ஆகிய தமிழர் கூட்டம் அனைத்தினதும் அரசியற்றலைவர்கள் எல்லோருமே ஒரு கொடியின்கீழ் அணிதிரள உடன்பட்டுவிட்டனர். 1975இல் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயிற்று. இறைமையுள்ள தனித் தமிழ் அரசான ஈழம் நிறுவுவதே தனது இறுதி இலட்சியம் என இந்தக் கூட்டணி திரு. செல்வநாயகத்தின் பணிப்பின்பேரில் பிரகடனப்படுத்தியது. இவ்வாறு இலங்கை அரசியலில் ஒரு புதுக் கருத்தையும் சொற்றொடரையும் திரு. செல்வநாயகம் புகுத்திவிட்டார். தமிழ் பேசும் மக்களிடையே தாம் தனியான ஓர் இறைமையுள்ள தேசிய இனம் என்ற சிந்தனை அலைகளைக் கிளப்பிவைத்தார் அவர். உள்நாட்டில் விவாதத்துக்கும் பூசலுக்கும் உரித்தாயிருந்த தமிழர் பிரச்சினை இப்பொழுது உள்நாட்டு விடயம் மாத்திரமன்றி; அயலிலுள்ள இந்தியாவின் அரசியலில் பேசப்படும் விடயமாக விரிவடைந்து இப்பொழுது ஓர் அனைத்துலகப் பிரச்சினையாக அது முதிர்ந்துவிட்டது. 1977இல் திரு. செல்வநாயகம் காலமானார். ஆயினும் 1949இல் அவர் தொடங்கிவைத்த இயக்கம் அவர் மறைந்த அதே கட்டத்திலேயே தன் உச்சநிலையை எட்டிப்பிடித்துவிட்டது.

1957 முதல் 1977 வரையான காலத்துப் பாரிய செல்வநாயகச் சாதனைகளின் யதார்த்த பெறுமதிகளை ஏட்டறிவுக் கோட்பாடுகளில் வைத்து இப்போது விளக்க முயற்சிப்பேன். எந்தவிதத் தடைகள் முன்னும் எட்டிநிற்காது அவற்றுள் நுழைந்து தலையிட்டு வழி சமைக்க முயலும் அடக்கவொண்ணு இயல்பு அவரது மாபெரும் சொத்து. வசீகரத் தலைவன் ஒருவனின் குணதிசயம் அது. தமிழ் மக்களின் உள்ளத்து உணர்வுநிலை மட்டத்துக்குக் கீழேயுள்ள இருண்ட கொந்தளிப்புகளிடையே திரு. செல்வநாயகத்தின் கூர்மதி பரந்தளாவியது. புதுப் புதுச் சிந்தனைகள் கருத்துக்கள் என்று பற்பல மணிகள் உள்ளத்தின் மேல்மட்டத்துக்கு வந்தன. இவை அனைத்தையும் அவர் தொடுத்துக் காட்டித் தமிழனின் அறிவுப்பலத்தை விரிவாக்கினுர். 'குடியேற்றம்', 'பாரம்பரிய தாயகம்', 'தமிழ் பேசும் மக்கள்', 'மலைநாட்டுத் தமிழர்', 'மொழியிலிருந்து பிரிக்கவொண்ணுத பிரதேசம்', இணைப்பாட்சி', 'ஈழம்' என்று பற்பல கருத்துணர்வுகளைப் பரவித் தெளித்தார். இவை அனைத்தும் தமிழ் பேசும் மக்கள் வாழ்க்கையில் மாத்திரமல்ல இலங்கை அரசியலிலுள்ள மேல்மட்டத்தவர் அனைவரினதும் நாவிலும் இடம் பெற்றன. இப் புதுச் சொற்றொடர்கள் கருத்துக்கள் சிந்தனைகள் அனைத்தையும் பிரயோகித்துத் திரு. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்களின்

அறிவுநிலை மனத்தின் எல்லைகளை விசாலித்தார். 'இலங்கை நாட்டினம்' என்ற கருத்தற்ற ஒரு பெரும் உடலில் ஒரு சிறு உறுப்பாக விளங்கும் ஓர் அற்ப அலகு அல்ல தமிழினம். தமது சொந்த மிடுக்கிலேயே தாம் ஒரு தனி இனம் என்ற உணர்வைத் தமிழ்பேசும் மக்கள் மனதில் இடித்திடித்துப் பதித்தார் திரு. செல்வநாயகம்.

இப் பெருஞ் சாதனையை இவர் எவ்வாறு செய்ய முடிந்தது? தமது மக்களின் உரிமைப்பசிக்கு அவர் உணவளித்தார். நெருக்கடிக் கட்டத்தில், குழப்பத்தில், நிச்சயமின்மையில் தமது சமுதாயத்தினதும் கலாச்சாரத்தினதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள், பண்புகள் அனைத்தும் சிதையும்போதும் தமிழ்பேசும் மக்கள் உரிமை உணர்விற் குட்பட்டனர். 1954க்குப் பிந்திய காலத்தில் சிங்கள பௌத்த ஆக்கிர மிப்பு தலைதூக்கவே தமிழ்பேசும் மக்களின் செம்மை நிலையின் அடிப் பாறை ஆட்டங்கண்டுவிட்டது. அந்தநிலையில் தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஒரு புதிய சமுதாய அமைப்பை, இதுவரை இத்துணை சுகமாக வாழ்ந்து தற்பொழுது அருகிவருவதுமான அந்த இதமான உலகத்தின் வேதனைகள் பிரச்சினைகளுக்குப் புதியதொரு பரிகாரத்தைத் தரவல்ல தலைவன் ஒருவனைத் தேட முற்பட்டார்கள். வசீகரத்தின் வளர்ச்சியில் இது உண்மையான ஒரு கடைசிக்கட்டம். தமிழ்பேசும் மகன் ஆதர வற்றவனுயினுன். தனது வாழ்க்கைக்குக் கருத்தளித்து வந்த வளம் அனைத்தும் அவனிடமிருந்து பறிக்கப்பட்டன. இந்த நிலைமையில் குழந் தைப்பருவத்துக்குள் பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்தான். இப்பொழுது அவனது வாழ்வு முற்றிலும் இனிப் புதிதாகத் தொடங்கவேண்டும். பிற சந்தர்ப்பங்களில் இதேபோன்ற பின்னணிகளில் இத்தகைய பரிண மிப்புகள்பற்றி உளவியலாளர் ஒன்ஸ்ற் கிறெற்ஷ்மர் கூறியிருக்கின்றுர். அன்னுரின் கோட்பாட்டின்படி தமிழ் பேசும் மக்களைக் கணக்கிட முடியாத பிரமாண்டமான நெருக்கடியும் கண்டமும் திடீரெனப் பற்றிக் கொண்டுவிட்டது. இந்த எதிர்பாரா நெருக்கடிச் சகாப்தத்தில் சூடு பிடிக்க ஆரம்பித்ததும் திரு. செல்வநாயகம் போன்ற ஒரு நெருக்கடி காலத் தலைவன் தோன்றியே ஆகவேண்டியிருந்தது. தக்கதருணத்தில் தக்க தலைவன் தோன்றுவதற்கான உதாரணம் இது. அத்தகைய தலைவர்கள் யுத்த பிரளயம், புரட்சி, வெகுஜனச் சிந்தனை வெள்ளம் என் பனவற்றை ஏற்படுத்தும் வன்மைபெற்றவராக இருப்பர் என ஒன்ஸ்ற் கிறெற்ஷ்மர் வலியுறுத்துகின்றுர். எங்கிருந்தென்று தெரியாது முளைத்து வெடித்த இந்தச் சக்திகளுக்குத் தலைமை அளிக்கத் தேவைப்படும் அதே வன்மையும் திறமையும் திரு, செல்வநாயகம் அவர்கள் பெரிதும் பெற்றிருந்தார். தலைமை அளிப்பதுடன் அவர் நிற்கவில்லை. அதற்கும் மேலாக அவர் இம் மக்களின் மனச்சலிப்புகள் நம்பிக்கையிழந்த நிலை ஆகியவற்றைஆற்றுப்படுத்தி ஆக்கபூர்வமான எதிர்ப்பு மனேநிலையை ஊட்டிப் பலமான எதிர்ப்பைக் கட்டிஎழுப்பினுர். தமிழ் பேசும்

மக்களுக்கு அவர் தந்தைவடிவம் ஆனுர். தம்மைச் சுற்றியமைந்த தமது உலகம் அனைத்தும் சிதைந்து விழுந்துகொண்டிருக்கவும், மனச்சோர்வும் ஆதரவின்மையும் மேலோங்கி அமுக்கவும் தமிழ் பேசும் மக்கள் குழந்தைப்பருவத்துக்குள் நுழைவதைவிட வேறெதையுஞ் செய்ய வழியற்றவராஞர்கள். இந்தக்கட்டத்தில் இம்மக்களுக்கு தந்தை வடிவத்தில் புதிய சமுதாய நிச்சயம் ஒன்றை அவரால் நிருமாணிக்க முடிந்தது. சரியான இந்தத் தக்கதருணத்தில்தான் திரு. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் புதிய ஒரு கருத்தும் புதிய ஒரு தெம்பும் அளிக்க ஆரம்பித்தார். அதாவது அவர் இவர்களின் தந்தையராக இவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினுர். தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை தமது தந்தையும் பாதுகாவலனும் தம்மைக் கைவிடமாட்டார் என்பதை நன்ருகத் தெரிந்திருந்தார். கண்ணை மூடிக்கொண்டு அவர்மீது நம்பிக்கை வைத்திருந்தனர். முன்பு சொன்னதை மீண்டும் கூறுகிறேன். வரலாறு, காலம், விதி என்ன பெயரிட்டாலும் சரி ஏதோ ஒன்றின் விளைவாகத் திரு. செல்வநாயகத்துக்குக் குழந்தைப் பருவத்தில் தந்தையின் அன்பு கிடைக்கவில்லை. கூருணர்ச்சி உள்ள இவர் என்னைப்பொறுத்தமட்டில் தான் தீர்த்துவைக்க முடியாததைத் தீர்த்துவைப்பதில் தோல்வி கண்டதை தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை தீர்த்துவைக்கப் புறப்பட்டார். இதேநிலையில் எல்லோரும் அப்படி நடப்பவர்களாகத்தானிருப்பார்கள் என்று கூறமுடியாது. வரலாற்றில் உயர்ந்து நிற்கும் ஒருவர்தான் தனது குறைபாடுகளை வெற்றிகளாக மாற்றுவதில் சித்தியடையமுடியும். திரு. செல்வநாயகம் இந்த வகையில் ஒருவர்; சாதாரண மாந்தரில் இருந்து வேறுபட்ட ஒரு மலையாக உயர்ந்து நின்றவர்.

மாந்தருள்ளம் தமது உன்னத தலைவர்களை மனித தெய்வங்களாக உருவகஞ்செய்தது. இத்தகைய மனித தெய்வங்களில் வசீகரத் தலைவனுக்கு இருக்கும் மூன்ருவது குணதிசயம் தெளிந்த தூரநோக்கு ஆகும். திரு. செல்வநாயகம் இதற்கு ஓர் அதியுன்னத உதாரணமாவர். இரு உலகங்களில் வாழ்ந்த ஒரு வசீகரத் தலைவர் இவர். இவற்றுள் ஒன்று இவரது சிந்தனை உலகம். மற்றது இவர் ஏனையோருடன் சேர்ந்து வாழ்ந்த நிச உலகம். ஆனுல் இவருக்கோ தனது கற்பனுலோகம்தான் அதிகம் உண்மையானதாக இருந்தது. அவரது இந்தக் குணதிசயமும் தலைமைப் பாணியுமே இவரது சமகாலத்தவர்கள் இவரை ஒரு கனவுலகவாதி என்று கருதவும் வைத்தது. மறு புறத்தில் இவரை ஒரு வெறியர் என்று நினைத்தவர்களும் உண்டு. அது எவ்வாறிருப்பினும் அவரிடம் ஒரு நிச்சயத் தன்மை இருந்தது. அவரது உலக நோக்கிலும் மனக் காட்சியிலும் ஒரு கனவு, ஒரு தோற்றம் பலருக்கு யதார்த்த மற்றதாகத் தெரிந்ததும் அவருக்கு முற்றிலும் உண்மையானதுமான ஒரு அரசியற் தீர்வு இருந்தது. இந்த நிலைமை இன்று நேற்றல்ல, எல்

லாம் இனிமையாக இருந்த 1949இல் அந்தப் ''பொன்னுன காலத்தில்'' அவர் கண்ட கனவும் அதுவே. அந்தக் காலத்தில் எவருக்கும் அடையவே முடியாதெனத் தோன்றியதும் எவருமே நம்பமுடியாததுமான அரசியற் பரிகாரம் ஒன்றைக் கருவாக்கினுர் அவர். இணைப்பாட்சி அமைப்பொன்ருக அமையும் இலங்கையிலே அவர் தமிழ் பேசும் மக்களின் மொழியையும் கலாச்சாரத்தையும் வாழ்விடத்தையும் பாதுகாக்க விரும்பினுர். மொழியும் வாழ்விடமும் இணைபிரிக்கமுடியாதவை என்று இடித்து இடித்து உரைத்தார். 1949இல் வழமைக்கு முரணுன கருத்து ஒன்று என இழித்துரைக்கப்பட்ட ஒரு விடயம் இன்றைய இலங்கையில் வைதீக அரசியற் கோட்பாடு என்ற கௌரவத்திற்கு உயர்ந்து விட்டது; இவர் உயர்த்தி வைத்தார்.

அவரது தூர தரிசனத்தின் நிச்சயத் தன்மை காரணமாகவே தான் முன்னுக்கு வைத்த அடியைப் பின்னுக்கு எடுக்க மறுத்து நின்ருர். கொள்ளவும் கொடுக்கவும் இடமில்லை. கொள்கை நிலையில் சமரசமில்லை. மந்திரிப் பதவிதானும் இலஞ்சமாகிவிட இடமேயில்லை. அவரைப் பொறுத்தவரை நிலைமை 'வைத்தால் குடுமி அன்றேல் மொட்டை' என்பதுதான். பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கைபோன்ற இடைக்கால ஏற்பாடுகள் இருந்தாகலாம். ஆனுல் அவ்வாருன ஏற்பாடு இலட்சிய பூமியை நோக்கிய நீண்ட பயணத்தில் மைல்கல்லே. 1965இன் டட்லி சேனநாயக்கா உடன்படிக்கையும் வேறுபட்ட ஒன்றல்ல. 'சன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் துணிவாகச் சொல்லி வைத்தார். இப்பொழுது பெறும் அற்பம் மூலம் பின்னர் அதிகம் பெறுவதற்கான ஒப்பந்தம் இது என்ருர். இந்த நிலைதளரா நெறி காரணமாக மந்திரிப் பதவியினுல் அவரை மயக்க முடியவில்லை. அந்தக் காலத்து உள்நாட்டமைச்சர் சேர் எட்வின் விஜயரத்தினு எழுதிய கடிதம் ஒன்றை திரு. செல்வநாயகம் எனக்குக் காட்டினுர். டி. எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் சேர்ந்து நாட்டுக்கு உழைக்கும்படி அதில் கௌரவ அமைச்சர் கேட்டிருந்தார். திரு. சேனநாயக்காவின் பணிப்பின்மீதே அக்கடிதம் எழுதப்பட்டது என்பது தெளிவாக இருந்தது. அவரது வழக்கம் போல திரு. செல்வநாயகம் அக்கடிதத்துக்குப் பதில் எழுதவில்லை. மந்திரி பதவி ஏற்கும்படி வேறும் பலர் பல சந்தர்ப்பங்களில் இவரை நெருக்கினுர்கள். ஆனுலும் திரு. செல்வநாயகம் தனது குறிக்கோளிலிருந்து திசைமாறவில்லை.

துரதிர்ஷ்டம் கண்டும் அவர் துவண்டதில்லை. நடேசனின் தேர்தல் வழக்கில் நீதியரசர் கே. டி. த. சில்வா வழங்கிய அதீத செலவு தொகை காரணமாகத் தளர்ந்திருந்த நிலையில் அவரின் அரசியல் வரலாறு முடிந்துவிடும் என்று நான் நினைத்தேன். அவரது பதிலில் சோர்வு இடம் பெறவில்லை. இன்னலின் மத்தியில்தான் ஒரு சிறந்த தளபதியின் வன்மை தெரியும் என்ருர். தமிழ்த் தேசிய இயக்கத்தில் தான் ஆற்ற வேண்டும்

என்று கருதிய பங்கை நோய்தானும் தடைப்படுத்த முடியவில்லை. தனது சட்டத் தொழிலைப் பார்ப்பதில் தனக்குப் பெரிதும் தேவைப் பட்ட முக்கிய விடயம் தனது செவிப்புலன் என்றும் அதுதான் தன்னைப் பொறுத்தவரை பெரும் குறையாயிருக்கிறது என்றும் வருந்திக் கூறினார். அத்துடன் தமிழ்பேசும் மக்களின் தலைவன் என்ற வகையில் அவருக்கு மிக விலையான சொத்து அவரது குரல். ஆனால் 'பாக்கின்சன்' நோய் அவரது குரல் நாண்களைப் பாதித்து விட்டது; குரல் மிக மிக மெலிந்து விட்டது. ஆயினும் தான் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்று உணர்ந்தார். அம்மட்டல்ல, அரசுக்கு எதிராக எதிர்க் கட்சியில் மிக நீண்ட காலமாக இருந்ததும் அவருக்குக் கவலையான விடயமாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சியில் விடாப்பிடியாக இருப்பத னால் தமிழ் மக்களுக்கு அவர் மறுத்துக்கொண்டிருக்கும் நன்மைகள் பற்றி நான் நச்சரித்துக் கேட்டபோது ஐயர்லாந்து நாட்டுத் தேசிய வாதிகளும் அதையே செய்தார்கள், சுதந்திர இனம் ஆனார்கள் என்று பதிலளித்தார். சிங்களக் குடியேற்றத்தினால் தமிழர் பூமி அழிந்து போகாது காப்பாற்ற அவர் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று நான் எச்சரிக்கையாகக் கேட்டபொழுது அவரது பதில் அவரது தனி முத்திரையை அடித்துக் காட்டியது. மூன்று சந்தர்ப்பங்களில் போலாந்து நாட்டின் பெரும் பகுதிகளை அந்நாட்டின் ஆக்ரோஷமிக்க அயலவர்கள் அபகரித்தார்கள். மூன்றாவது தடவையில் போலாந்து நாடே ஐரோப்பாப் படத்திலிருந்து அழிக்கப்பட்டுவிட்டது. போலந்து ஒரு நாட்டினம் என இல்லாதொழிந்தது. ஆயினும் 1வது உலக யுத் தத்தின் பின்னர் அந்நாடு இறைமையுள்ள அரசு ஒன்றாக மீளவும் அமைக்கப்பட்டு இன்றுவரை உயிர் வாழ்கின்றது என்றார் அவர். எனவே நாம் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும் என்று வினவினார்.

வரலாற்றில் உயர்ந்து நின்ற இந்த மனிதரைப் பற்றி வரலாற் றின் தீர்ப்பு என்னவாயிருக்கும் என்று நான் கருதுவதைக் கூற நினைக் கிறேன். தமிழ்பேசும் மக்களைச் சூழ்ந்துள்ள குழப்பத்திலும் அழிவிலு மிருந்து, இன்று அவர்கள் வீழ்ந்திருக்கும் பாதாள நரகத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு ஒன்று தனக்கு உண்டு என்று கருதி விரும்பமின்றித் தலைமையை ஏற்க முன்வந்த ஒருவர் திரு, செல்வநாயகம் என ஆரம்பத்தில் நான் கூறியிருக்கிறேன். Ceylon Observer Pictorial 1963 என்ற பிரசுரத்தில் திரு. மேவின் த. சில்வா என்ற பிரபல பத்தி ரிகையாளர் தொகுத்து எழுதிய Political Portfolios என்ற கட் டுரையை நீங்கள் பார்த்தால் நான் என்ன கூறுகிறேன் என்பது புரியும். இப் பிரசுரத்தில் திரு. செல்வநாயகத்தைப் பற்றித் துருவிக் கூறும் வர் ணனை ஒன்று இருக்கிறது. 'வெளியிலிருந்து (அரசியலுக்கு) வந்த துறவி', 'வெளிப்புலத்தார்', சட்டத்துறைப் புறத்தோன்', 'நினைத்துப் படைத் தல்லாது தற்செயலாக அரசியல் வாதியாகிவிட்ட இராணி வழக்கறி

ஞன், என்பன அவற்றில் சில. அல்பிறட் ஹவுஸ் தோட்டத்திலுள்ள இவரது வீட்டுக்கு அடிக்கடி போயும் இடைவிடாத தொலை பேசி அழைப்புகள் இடையறுது வேண்டுகோள்கள் மூலமும் இவரைத் தமிழ்த் தேசிய இயக்கத்துக்குள் கயிறு கட்டி இழுத்துப் போட்டவர் பிரபல கொழும்பு வழக்கறிஞரும் தலைவருமாகிய திரு. எஸ். சிவசுப்பிர மணியம் அவர்களே. காலஞ் சென்ற கோப்பாய்ப் பாராளுமன்றப் பிரதி நிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் தந்தையார். திரு. செல்வநாய கத்தை அரசியல் தண்டவாளத்தில் தூக்கி வைத்தவர் அவர். தண்டவா ளத்தில் ஏறிய றெயில் வண்டியோ அந்தத்தை நோக்கி விரைந்தது. பிற சிந்தனையை மறந்தது. திரும்பிப் பார்த்ததில்லை; பிற்பக்கம் சென்ற தில்லை; பின் திசையில் ஓடவில்லை; ஓட்டம் நிற்கவில்லை; வேகம் குறையவில்லை; திசை விலகவில்லை; ஒரே ஓட்டம்; ஒரே இலக்கு.

நீண்ட நேரம் எடுத்துவிட்டேன். உரையை நிறுத்துமுன்னர் எனது ஆய்வுச் சித்திரத்தை நிறுவுகிறேன். திரு. செல்வநாயகம் ஒரு தேசிய இனத்தின் தந்தை, தமிழ் இனத்தின் தந்தை. வரத்துக்காரராகிய போர்த்துக்கேயர் 1618இல் வடஇலங்கையிலிருந்து தமிழ் அரசை அழித் தொழித்த பின்னர் தமிழ்த் தேசிய இனத்துக்கு உயிரூட்டி மீண் டெழும்ப வைத்தார் திரு. செல்வநாயகம். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சிங் களவர், தமிழர், முஸ்லீம்கள், இந்தியத் தமிழர், பறங்கியர் அனைவரும் இந்நாட்டினத்தின் உறுப்பினராகக் கருதப்பட்டனர். பிரிட்டிஷ் ஆட்சி யின் கீழும் சுதந்திரத்தையடுத்து 1947 முதல் 1956 வரையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் யாழ்ப் பாணத் தமிழர், மன்னார்த் தமிழர், வவுனியாத் தமிழர், திருகோண மலைத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், கொழும்புத் தமிழர், இந்தியத் தமிழர் என்று பிரிந்து நின்றனர். திரு. செல்வநாயகத்தின் தலைமையில் தமிழ் மக்களின் இப்பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்று கத் திரண்டனர். புதிய தேசிய இனம் ஒன்றை நிறுவினார். திரு. செல்வ நாயகம் இதுசிங்களத் தேசிய இனத்திலிருந்த வேறான ஒன்று. தமிழ் தேசிய இனத்தை இவர் மீண்டும் உருவாக்கியதுதான் இவரது மாபெரும் சாதனை; தமிழ்பேசும் மக்களின் சமீபகால வரலாற்றில் அபூர்வம் மிக்க நிகழ்ச்சி. இதைச் சாதிப்பது உண்மையிலே மிகக் கடினமான காரியம் என்று அவர் ஒருமுறை என்னிடம் கூறினார். தமிழ் மகன் மூளையுள்ளவன், கெட்டிக்காரன், எனவே சமுதாயம் என்றில்லாது பெரிதும் தன்னினைவு நிரம்பியவன் என்று கூறினார். பிரபல பிரெஞ்சுத் தளபதி சால்ஸ் டிகோல் தனது பிரெஞ்சு மக்களைப் பற்றிக் கூறியது எனக்கு ஞாபகம் வந்தது. ''பிரெஞ்சுக்காரர் அனைவரும் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் வெறுப்பார்கள். ஆனால் அனைவரும் பிரான்சு நாட்டை நேசிப்பவர்கள்'' என்றாரவர். தனது தமிழரசுக் கட்சி தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுத்த முடிந்தது. அவர்க

ளது சேரிடத்தைச் சுட்டிக் காட்டியது, தன்மானத்துக்கும் தேசிய இனத் துவத்துக்கும் அதைவிட வேறு பாதையே இருக்க முடியாது என்று அதையே கோரிக்கொண்டார். மொழியும் பிரதேசமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதவை என்று பலருக்குத் தெளிவுபடுத்தினர்.

இந்த மாபெரும் சாதனையை எவ்வாறு அவர் சாதித்தார்? ஒரு தேசியத் தலைவருக்கு வேண்டிய சொத்துக்கள் எதுவும் அவரிடம் இருக்கவில்லை. அவர் ஒரு நோயாளி; செவிப்புலன் குறைந்தவர்; குரல் தணிந்தவர். இத்தகைய குறைபாடுகள் இருந்தும் தமிழ்பேசும் மக்களுக்கு அவர் போற்றுவதற்குரியவரானர். இத்தகைய முடமாக்கும் குறைபாடு கொண்ட நோயாளி போன்ற இன்னுமொரு தலைவர் இருந்தார். அவர் தான் ஐக்கிய அமெரிக்காவின் குடிபதி பிராங்லின் ரூஸ்வல்ற் ஆவர். போலியோ நோயால் தாக்குண்டு இடுப்பிலிருந்து பாதம்வரை அவ ருக்குப் பாரிசவாதம். இதனல் நடக்க இயலாதவர். சில்லுக் கதிரையில் வைத்துத் தள்ளப்பட்டவர். ஆயினும் அமெரிக்க மக்கள் அவரைப் பெரிதும் நேசித்தார்கள். தமது குடிபதியாக மீண்டும் மீண்டும் அவ ரைத் தெரிந்தெடுத்தார்கள். நாலாண்டுகாலப் பதவிக்கு நாலு தடவை அடுத்தடுத்துத் தெரிவு செய்யப்பட்டவர் ரூஸ்வல்ற். இவரைப் போன்று பெரிதும் நேசிக்கப்பட்டவர்தான் திரு. செல்வநாயகமும்.

திரு. செல்வநாயகத்தின் மிகப்பெரிய பலவீனம் அவரது செவிப் புலன். சட்டத்தொழில் புரிந்தபோது செவிப்புலக் கருவி ஒன்றுமூலம் இதை அவர் சமாளித்தார். 1950இல் சட்ட மாணவர்களுக்கும் வைத்திய மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த கிரிக்கெட் போட்டியில் இவரது இக் கட்டு நிலையை வேடிக்கைக்கார இம்மாணவர்கள் திறம்பட விபரித்துக் காட்டினர்கள். திரு. பொன்னம்பலத்தையும் அனைத்திலங்கைக் காங்கிரசையும்விட்டு 1949இல் விலகியபோது இவர் தன்னை அரசியல் வனந்தரத்துக்குள் தள்ளிக்கொண்டார் என்று இம்மாணவர்கள் நம்பி னர்கள். திரு. செல்வநாயகத்தைப்போல ஒரு பொம்மையைக் கட்டி னர்கள். உடலால் மெலிந்து பசியால் நலிந்த ஒரு வெருளி உருவம் அந்தப் பொம்மை. பொம்மையின் கழுத்தில் தொங்கிய அட்டையில் ''குருட்டுச் சீடர்கள் பின்தொடரும் ஒரு செவிட்டுத் தலைவர்'' என்ற வாசகம் காணப்பட்டது. எல்லாரும் பெரும் திருப்தியுடன் வாழ்ந்த அந்த 1950இல் இந்த வாசகம் ஒரு தீர்க்கதரிசனம் என்பதை யார்தான் கனவுதானும் கண்டிருப்பார்? திரு. செல்வநாயகத்தின் ஒல்லியான உரு வத்தையும் செவிப்புலக் குறைவையும் ஏளனஞ்செய்ய எடுத்த முயற்சி அது. ஆனலும் அந்த அட்டை எதிர்கால வரலாற்றுக்கு ஒரு சூசகமாக அமைந்துவிட்டது. அரசியலில் மாற்றுவழி எதையும் காதில்போட மறுத்தமையையும் எதிரணியினரின் கூக்குரல்களுக்குக் செவி கொடுக்க மறுத்தமையையும் செவிட்டுத்தன்மை குறிப்பிட்டுக் காட்டியது. அத்

துடன் தங்கள் கண்ணை மூடியபடி இந்தத் தெய்வம் காட்டும் கிணற்றுள் விழவும் சம்மதங்கொண்ட பக்தகோடிகளானார்கள் தமிழ்பேசும் மக்கள். என்ன விளைவு ஏற்பட்டாலும் அவருக்குப் பின்னால் கண்ணைமூடிய படியே நடந்தார்கள் இம்மக்கள்.

சாதிக்கமுடியாத இந்தச் சாதனையை இந்த மனிதர் எப்படிச் சாதித் தார்? தந்திச் செய்திகள் என்ற சூறுவளியைக்கொண்டு தனது நாட் டின் ஊழல்மிக்க ஆட்சியாளர்களைத் தான் வீழ்த்தியதாக நவீன துருக் கியின் பிதாவாகிய முஸ்தபா கெமால் அத்தாதேர்க் ஒருமுறை கூறினார். 1ஆவது உலக யுத்தத்தில் வெற்றிகண்ட சக்திமிக்க நேசநாடுகளுக்கு எதிராக இவர் 1922இல் யுத்தம் நடாத்தினார். எப்படி இந்த யுத்தத்தில் வென்றீர்கள் என ஒரு பத்திரிகையாளர் கேட்டார். புன்சிரிப்புடன் அவர் ''தந்திக் கம்பிகளைக்கொண்டு'' என்று பதிலளித்தார். தந்திக் கம் பிகளுக்கூடாகத் தகவல் பெறுவது வழங்குவது நாடனைத்திலும் பரந்தும் ஆனால் ஒருவரோடொருவர் பின்னிப் பிணைந்துமிருந்தது. சகாக்களுடன் கலந்து பேசுதல், நாட்டிலுள்ள வேறுபட்ட பிராந்தியங்களின் செயற் பாடுகளைப் பயன்படுத்துதல், இசைவு படுத்துதல், முரண்பட்டு நிற்கும் சமூகத் தொடுப்பினர்களையும் தனித்துவத்தை அழுத்திப்பிடிக்கும் தனி நபர்களையும் ஒரே குரலில் இசைய வைத்தல் என்பன அனைத்தையுமே தந்திக்கம்பிப் பரிவர்த்தனைமூலம் சாதிப்பதில் தங்கியிருந்தது கெமாலின் தலைமை, ''இணங்க வைத்தல், தொடர்பு ஏற்படுத்துதல், தொடர்பு கொள்ளுதல் என்பனமூலம் தலைமையைத் தாங்குவதில் இது ஒரு அசா தாரண மாந்திரீகனின் உச்சச் சாதனை'' என இவரது வரலாற்றில் நிபுணராகிய ஒருவர் இதனை வர்ணித்தார். அடுத்து பாகிஸ்தானை உரு வாக்கிய மாபெரும் தலைவர் காயிதே இசாம் முகமது அலி ஜின்னா வின் உதாரணம் ஒன்று உண்டு. இவரது அனைத்திந்திய முஸ்லிம் லீக் பாக்கிஸ்தானை உருவாக்குவதில் நிகழ்த்திய போராட்டங்களையும் தியாகங்களையும் பற்றி இவரது ஏவலர் ஒருவர் விபரித்துக் கொண்டே சென்றபொழுது ஜின்னா அவரை இடைநிறுத்தி ''அர்த்த மற்ற கதை கதைக்க வேண்டாம், பாக்கிஸ்தானை உருவாக்கியது நானும் எனது சுருக்கெழுத்தாளரும்தான்'' என்றார். எனவே திரு. செல்வநாய கத்தின் நிலைமை எப்படி? இதற்குரிய விளக்கத்துக்கு நான் மீண்டும் எனது நண்பன் மேவின் த. சில்வாவிடம் போகவேண்டும். முன்னர் நான் கூறிய Ceylon Observer Pictorial — 1963இல் திரு. செல்வ நாயகம் தமிழ்பேசும் மக்களின் மதிப்புக்குரிய தலைவராகும் பெறு பேற்றுக்குக் காரணங்கள் என்ன என்பதை அவர் விளக்க முயன்றிருக் கின்றார். அவரது பகுப்பாய்வு வர்ணனையில் இரண்டு சொற்றொடர்கள் வருகின்றன. பலரும் சொல்லுவார்களாம் ''செல்வா எங்களைக் கைவிட மாட்டார்'' என்று தொடர்ந்து இதனை வலியுறுத்தி அவர் திரு. செல்வ நாயகத்தின் மூளை உணர்ச்சிகளற்றது, வழவழா இன்றி அச்சொட்டான செம்மை உடையது, அத்துடன் அவரது நாணயம் பளிங்கு போன்றது

என்று எழுதினுர். எனது அபிப்பிராயத்தில் இந்தக் குணுதிசயங்கள் மூலம்தான் திரு. செல்வநாயகம் தமிழ்த் தேசிய இனத்தை நிறுவினுர். இவரது காலத்துக்கு முன்னர் இருந்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களுடனும் ஏனையோருடனும் ஐக்கிய இலங்கையில் தமிழ்மக்கள் எவ்வாறு ஒன்ருக வாழலாம் என்பதுபற்றியே பேசினுர்கள். அது சாத்திய மானது அல்ல என்பதைத் தீர்க்கதரிசி செல்வநாயகம் தெரிந்துகொண்டார். எனவே தான் உருவாக்கிய தமிழ்த் தேசிய இனத்தைத் தனித்துவத்துடனும் பிறிதானதாகவும் உறுதியான ஓர் அடித்தளத்திலிட நடவடிக்கை எடுத்தார். அரசியலில் சுதந்திர இறைமையுள்ள அரசு ஒன்றை அவர் நிறுவினுரல்லர். ஆனுல் அதற்கு முதற்படியாக அவர் தமிழ் பேசும் மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகச் சிந்திக்க வைத்தார். இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்கு முன்னர்சரி பின்னர்சரி அடைய முடியாதெனை ஆரம்பத்தில் தெரிந்த இந்த இலட்சியத்தை வேறெந்தத் தமிழ்த் தலைவரும் சாதிக்கமுடியவில்லை.

# S. J. V. CHELVANAYAKAM:

## A STUDY IN CRISIS LEADERSHIP BASED ON A PORTRAIT FROM MEMORY

by

Professor **A. JEYARATNAM WILSON**, Ph. D. (Lond.)

CHELVANAYAKAM MEMORIAL LECTURE, 1981
(TAMIL RENDERING)

Distributors:

- **'KANTHALAKAM'** 'காந்தளகம்',
  213, Kankesanturai Road, Jaffna (Phone: 22156)
  *213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்*

- **POOPALASINGHAM BOOK DEPOT**, பூபாலசிங்கம் புத்தகசாலை
  4 A, Hospital Road, Jaffna (Phone: 23631.)
  4 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**Price: Rs. 5-00**
**விலை: ரூபா 5-00**

Published by:

**THANTHAI CHELVA MEMORIAL TRUST, JAFFNA**

PRINTED AT:
THIRUMAKAL PRESS, CHUNNAKAM